இறையிருப்பிற்கான அறிவியல் சான்றுகள் (தொடர்ச்சி...) பக்கம் 3

காதியானும் அதன் புனித, வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும் (தொடர்-7) பக்கம் 9

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு (தொடர்-21) பக்கம் 16

சாலிஹ் நபி (அலை)-ன் பெண் ஒட்டகம் பக்கம் 23



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | September 2023 | Vol. 2 - Issue No. 10



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340





பைத்துல் ஹமீது பள்ளிவாயில், ஃபுல்டா, ஜெர்மனி



# திருக்குர்ஆன்

وَاَقِمِ الصَّلٰوةَ طَرَفَىِ النَّهَارِ وَزُلَفًا مِّنَ
الَّيۡلِ‌ ؕ اِنَّ الۡحَسَنٰتِ يُذۡهِبۡنَ السَّيِّاٰتِ‌ ؕ
ذٰ لِكَ ذِكۡرٰى لِلذّٰكِرِيۡنَ‌ ۚ

மேலும் (செவியேற்பவரே!) நீர் பகலின் இரு கோடிகளிலும், இரவின் (ஒரு) பகுதியிலும் (சிறந்த முறையில்) தொழுகையினை நிலைநாட்டுவீராக. நிச்சயமாக நற்செயல்கள், தீய செயல்களை அகற்றி விடுகின்றன. (அல்லாஹ்வை) நினைவு கூர்பவர்களுக்கு இது ஓர் அறிவுரையாகும். (11:115)



# ஹதீஸ்

عَنْ أَبِي ذَرٍّ قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ
وَسَلَّمَ اتَّقِ اللهِ حَيْثُمَا كُنْتَ وَأَتْبِعْ السَّيِّئَةَ الْحَسَنَةَ
تَمْحُهَا وَخَالِقِ النَّاسَ بِخُلُقٍ حَسَنٍ سنن التر
مذي أبواب البر والصلة باب ما جاء في
معاشرة الناس 1987

ஹஸ்ரத் அபூதர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“நீங்கள் எங்கு இருந்த போதிலும் இறைவனுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். ஒரு தீய செயல் செய்து விட்டால் அதனை ஒரு நற்செயலைக் கொண்டு பின்தொடருங்கள். அது அதனை (அந்த தீய செயலை) அழித்து விடும். மேலும் மக்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்.” (சுனன் திர்மிதி அப்வாபல் பிர்ரி வஸ்ஸிலஹ். பாபு மாஜாஅ ஃபீ மஆஷிரத்தின்னாஸ் 1987)


# இறையிருப்பிற்கான அறிவியல் சான்றுகள்

**டாக்டர் ஃபஹீம் யூனுஸ் குரைஷி சாஹிப்** நாயிப் அமீர் மற்றும் தேசிய தர்பிய்யத் செயலர், U.S.A.

**U.K. ஜல்ஸா ஸாலானா - 2023**

தமிழாக்கம்: இப்னு வஸீம், காதியான்

(சென்ற இதழின் தொடர்ச்சி...)




அப்துல் கரீம் அவர்கள் அற்புதமான முறையில் குணம் அடைந்ததை சஹாபா கண்ட போது, அவர்களுக்கு இறை-யிருப்பு தொடர்பாக வேறு ஏதாவது சான்றின் தேவை இருந்திருக்குமா? இது ஒரு நிகழ்வாக மட்டும் இருந்திருந்-தால் தற்செயல் என்று கூறியிருக்கலாம். ஆனால், 'ஹகீக்கத்துல் வஹீ' எனும் நூலில் மட்டுமே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 200-க்கும் அதிகமான அடையாளங்களை எழுதியுள்ளார்கள்.

அன்னார் இது தொடர்பாக ஒரு கம்பீரமான அறிவிப்பைச் செய்தவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

எவரேனும் ஒருவர் தந்திரமாகவும், தீங்கு விளைவிக்க எண்ணியும் இந்த அற்புதத்தில் என்னுடன் போட்டியிடுவார் என்றால், மேலும், இந்தப் போட்டி இந்த வடிவில் நடைபெறுமே ஆயின், அதாவது, உதாரணமாக, குலுக்கிப் போட்டு 20 நோயாளிகள் என் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டு, 20 நோயாளிகள் அவர் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டால், இறைவன் என் பங்கில் வரும் நோயாளிகளுக்கு மறு தரப்பினருடைய நோயாளிகளை விடத் தெளிவான முறையில் அதிகம் குணமளிப்பான். மேலும், இது வெளிப்படையாகத் தெரிகின்ற அற்புதமாக இருக்கும்.

இன்று மருத்துவ அறிவியல் எந்தக் கட்டங்கள் வழியாக ஒரு புதிய சிகிச்சையைக் கொண்டு செல்கிறதோ, முற்றிலும் அந்தக் கட்டங்கள் வழியாகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இங்கு துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலைக் கொண்டு செல்கிறார்கள்.

அதாவது, Randomization (சீரற்றமயமாக்கல்)-Outcome Measures (விளைவு நடவடிக்கைகள்) - Statistical Analysis (புள்ளி விவரப் பகுப்பாய்வு) ஆகியவை. வேறுபாடு என்னவென்றால், இந்த துஆ எனும் அறிவியல்படி செயல்படுவதனால் குணம் மட்டுமே கிடைப்பதில்லை அதையும் தாண்டி உயிருள்ள இறைவனும் கிடைக்கிறான்.

இது உறுதியான நம்பிக்கை வரை சென்றடை-வதற்கான எத்தகைய மேலான உத்தி என்றால், அன்னாரின் அடிமைகளும் உயிருள்ள இறைவனை அனுபவரீதியாக உணர்ந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் காலகட்டத்தில் ஓர் அஹ்மதி சான்றோர் இருந்தார். அவர் தமது அன்றாட வருவாயில் இருந்து ஓர் எட்டணாவை (ஒரு ரூபாயில் பாதியை மட்டும்) தம் தேவைக்காக வைத்துக் கொண்டு, மீதித் தொகை அனைத்தையும் சந்தாவில் கொடுத்து அனுப்பி விடுவார்.

ஒருநாள் அவருக்கு 300 ரூபாய் கிடைத்தது. அவருக்கு, நான் ஒருநாள் தேவைக்குப் பதிலாக, ஏன் அடுத்த ஆறு மாதங்களின் தேவைகளுக்காக 90 ரூபாயை இதிலிருந்து வைத்துக் கொள்ளக் கூடாது... வசதியாக இருக்குமே என்ற சிந்தனை வந்தது. மக்கள் கூறுகிறார்கள்:

அன்று அவர் பள்ளிவாசலில் ளுஹரின் ஃபர்ள் தொழுகை தொழுததுமே விரைவாக தமது வீட்டை நோக்கி ஓடினார். அப்படி என்ன அவசரம் என்று ஒருவர் கேட்டார். அதற்கு அவர் கூறினார்: எனக்கு இப்போது தொழுகையில் (பஞ்சாபி மொழியில்) இவ்வாறு குரல் கேட்டது:

"ہن میں 6 مہینے لئی تیرا رب نہیں ریا؟"

பொருள்: இப்போது ஆறு மாதங்களுக்கு நான் உம் இறைவனாக இருக்கவில்லையா?

அவர் அந்த உடனேயே வீட்டிற்குச் சென்றார். எப்போதும் போல் தமக்காக ஓர் எட்டணாவை வைத்துக் கொண்டு, மற்ற பணம் அனைத்தையும் ஜமாஅத்துக்காக அனுப்பி வைத்து விட்டார்.

நாம் நம் பிள்ளைகளுக்கு, இறைமறுப்பின் வழி அறிவியலின் வழியல்ல. மாறாக, ஆணவத்தின் வழி என்று கூற வேண்டும். இந்த ஆணவத்தைச் சுட்டிக்

காட்டியவாறே ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் Richard Dawkins என்பவருக்குத் திருக்குர்ஆனின் 5 Volume Commentary மற்றும் இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் நூலின் ஆங்கில மொழியாக்கத்தை அனுப்பி வைத்தார்கள். ஆனால், அவர் நான் எழுதிய நூலை நீங்கள் படியுங்கள். எனக்கு நீங்கள் எழுதிய நூலைப் படிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறினார்.

Richard Dawkins, Sam Harris, Christopher Hitchen போன்ற பெயர் தாங்கிய தத்துவஞானிகள், அறிவியலின் குவளையிலிருந்து சில மடக்குகள் குடித்து விட்டு, தமது ஆணவம் மற்றும் வீண் பெருமைக்கு அறிவு என்று பெயர் சூட்டுகிறார்கள்.

எனவேதான், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் (தமது உருதுக் கவிதையில்) இவ்வாறு கூறியுள்ளார்கள்:

آواز آرہی ہے یہ فونوگراف سے ڈھونڈو خدا کو دل سے نہ لاف گزاف سے


பொருள்: இந்த ஒலிப்பெருக்கிக் கருவியிலிருந்து ஓசை வருகிறது. இறைவனை வீண் பெருமையால் அன்றி, உள்ளத்தால் தேடுங்கள்.

இறைமறுப்பாளர்களின் எண்ணிக்கையைப் படிக்கும்போது இந்த விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும், கிறிஸ்துவத்தில் இருந்து இறைமறுப்பாளர்களாக ஆனவர்களுக்கும், இஸ்லாத்தில் இருந்து இறைமறுப்பாளர்களாக ஆனவர்களுக்கும் இடையே ஒரு மிகப் பெரும் வித்தியாசம் உள்ளது.

கிறிஸ்தவர்கள் பைபிளைக் கவனமாகப் படிக்கும் போது, இறைமறுப்பின் பக்கம் செல்கிறார்கள். முஸ்லிம்கள் திருக்குர்ஆனை கவனமாகப் படிக்காத போது இறைமறுப்பின் பக்கம் செல்கிறார்கள்.

அறிவியலின் குவளையின் அடிப்பகுதி வரை செய்யும் பயணம் ஒரு நீண்ட பயணமாகும். ஒரு பெரிய அறிவியல் முன்னேற்றத்திற்கு இன்றைய நாட்களில் ஒரு நல்ல விஞ்ஞானிக்கு 20 முதல் 25 ஆண்டுகள் வரை எடுக்கின்றன என்பது ஆய்வின் மூலம் தெரிய வருகிறது. இதே போன்று நாம் நமது உலகக் கல்வியிலும் 20 முதல் 25 ஆண்டுகளை செலவழிக்கிறோம்.

கேள்வி என்னவென்றால், நாம் 20 முதல் 25 ஆண்டுகளாக, இதே அளவு கடுமையாக உழைத்து, துஆவும் செய்துள்ளோமா? ஒரு பட்டம் வாங்குவதற்கோ நாம் 25 ஆண்டுகள் வியர்வை சிந்துவோம். ஆனால், உயிருள்ள இறைவனைப் பெறுவதற்காக நாம் 25 நாட்கள் கூட அழுதழுது துஆ செய்ய மாட்டோம் என்றால், நமது இந்த எதிர்பார்ப்பு சரியானதா?




ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "அல்லாஹ்வின் அருள் மற்றும் கருணை எனும் பாலும் ஒரு மன்றாடலை எதிர்பார்க்கிறது. அழுது புலம்புவதை எதிர்பார்க்கிறது. எனவே, அவன் முன் அழும் கண்களை சமர்ப்பிக்க வேண்டும்." (மல்∴பூஸாத் தொகுதி 1, பக்கம் 233 ரப்வா வெளியீடு 2003)

அந்த மகத்துவமிக்க நபி (ஸல்) அவர்கள் பிறக்கும் போதோ ஓர் அநாதைக் குழந்தையாக இருந்தார்கள். அன்னாரின் தாயார் ஆறு ஆண்டுகளில் அன்னாரை விட்டுச் சென்று விட்டார்கள். அன்னார் ஹிரா குகையின் இருளில் எந்த அளவு மன வேதனையுடன் துஆக்கள் செய்தார்கள் என்றால், எந்த உள்ளத்துடன் இறைவனைத் தேடினார்கள் என்றால், இறைவன் அன்னார் வரை வந்தடைந்து விட்டான்.

பல ஆண்டுகள் கழித்தும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அல் அஷ்கீர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அன்னார் தொழுது கொண்டிருக்கையில் கண்டேன். அழுவதன் காரணமாக அவர்களின் நெஞ்சில் இருந்து (கொதி கெண்டி(Kettle)-இல்) பாத்திரத்தில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருப்பது போன்று சத்தம் வந்து கொண்டிருந்தது.

அன்னாரின் உண்மை ஊழியரும் உள்ளத்தாலேயே இறைவனைத் தேடினார்கள்.

ஒரு சஹாபி இவ்வாறு எழுதியுள்ளார்கள்: பிளேக் நோய் (பரவிய) நாள்களில் ஓர் இரவு நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை, அடுப்பில் உலை கொதித்துக் கொண்டிருப்பது போன்று சஜ்தாவில் மன்றாடுவதைக் கண்டேன். நான் அருகில் சென்று கேட்டபோது அன்னார் இவ்வாறு துஆ செய்து கொண்டிருந்தார்கள்: அல்லாஹ்வே! இந்த தண்டனையில் இருந்து உலகத்தைக் காப்பாற்றுவாயாக!

நமது சொந்தக் கதையும் இப்படித்தான் இருந்தது. ஆனால், அது நமக்கு நினைவில்லை. நினைவுபடுத்திப் பாருங்கள்! குழந்தைப் பருவத்தில் பசியெடுத்தபோது

நாம் தாய் மீது சந்தேகப்பட்டதில்லை. விவாதம் செய்ததில்லை. அவள் இருக்கிறாள் என்பதை மறுத்ததில்லை. உரக்க அழுது வந்தோம். இன்னும் அதிகம் அழுது வந்தோம். தாய் வரை சென்றடை-வதற்கான ஆற்றல் நம்மிடம் இருக்கவில்லை. ஆனால், நமது கதறலைக் கேட்டு தாய் எப்பொழுதும் நம் வரை வந்தடைந்து விடுவாள். இறைவன் வரையும் நம்மால் நமது ஆற்றலால் சென்றடைய முடியாது.

لَا تُدْرِكُهُ الْأَبْصَارُ ۖ وَهُوَ يُدْرِكُ الْأَبْصَارَ

பார்வைகள் அவனை அடைய முடியாது. ஆனால், அவன் பார்வைகளை அடைகிறான்.



இந்த உரையாடலுக்குப் பிறகு, இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்?

1. முதல் பணி சீர்திருத்தம் ஆகும். (இது) பெரியவர்களுக்கானது; பெற்றோர்-களான நமக்கானது. இதைப் பற்றி ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் பலமுறை, 'நாம் நம்மை ஆய்வு செய்ய வேண்டும்' என்று கூறியுள்ளார்கள். பிள்ளைகளைப் போன்ற பணிவு நம்மிடம் இருக்கிறதா அல்லது அகந்தை இருக்கிறதா?

ஆணவத்துக்குப் பதிலாக, குழந்தைகள் போன்ற பணிவும் உதவியில்லா நிலையும் இருக்கும்போது இறைவன் பார்வைகள் வரை வந்தடைகிறான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நினைவில் கொள்ளுங்கள்! எப்போது வரை குழந்தைகள் போன்ற எளிமை உருவாகாதோ, அப்போது வரை மனிதனால் நபிமார்களின் கொள்கையை மேற்கொள்ள முடியாது. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 440)

முதலில் நாம் நம்மை சீர்திருத்திக் கொள்ள வேண்டும்.

2. இரண்டாவது பணி முன்மாதிரியாகும். சீர்திருத்தத்திற்குப் பிறகு, நாம் பிள்ளைகளுக்கு நமது முன்மாதிரியைக் காட்ட வேண்டும். திருக்குர்ஆன் மீது ஆழ்ந்து கவனம் செலுத்த வேண்டும். வீட்டில் தொழுகையைக் கடைபிடிக்க வேண்டும் அத்துடன் கடைபிடிக்கச் செய்யவும் வேண்டும். பிள்ளைகளின் உலகக் கல்விக்கு முன்னதாக இந்த விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் Netflix-இல் செல்வதற்கு முன்னர் தொழ வேண்டும். YouTube-க்கு முன்னதாக திருக்குர்ஆன் திலாவத் செய்ய வேண்டும்.

பிள்ளைகளும் இளைஞர்களும் அறிவியல் கல்வியுடன் சேர்த்து தொழுகை மற்றும் திருக்குர்ஆனையும் ஒருபோதும் மறக்கக் கூடாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அறிவியல் ஆயிரம் முன்னேற்றங்கள் அடைந்தாலும் திருக்குர்ஆனின் மீது மேலோங்க முடியாது.

3. மூன்றாவது, தொழுகைகளில் துஆக்கள் கேட்க வேண்டும். தேவை ஏற்படும்போது இஸ்திகாராவும் (அதாவது, நன்மையை வேண்டி துஆவும்) செய்ய வேண்டும். அப்போதுதான் இறைவன் நம் வரை வந்தடைவான். நாமும் நம் பிள்ளைகளும் உறுதியான நம்பிக்கை வரை சென்றடைவோம். இன்னல்களின் போது நம்முடைய பெற்றோர்களின் உண்மையான நம்பிக்கை காரணிகள் மீது அல்லாமல், அல்லாஹ்வின் மீது இருந்து வந்தது என்பதை நமக்குப் பிறகும் நம் பிள்ளைகள் நினைவில் கொள்ள வேண்டும்.

கடினமாக உழைக்கும் ஒரு விஞ்ஞானியைப் போன்று பல ஆண்டுகள் வரை நமக்கு இதன்படி செயல்பட நல்வாய்ப்பு கிடைத்தால், அல்லாஹ்வின் அருளால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறிய இந்த நிலை ஏற்பட்டு விடாலாம்:

நாம் இறைவனுடையவர்களாக ஆகி விடுவோம் இறைவன் நம்முடையவனகாவும் ஆகி விடுவான். நாம் இறைவனைக் காண்போம். உலகம் நம்மிடம் இறைவனைக் காணும். நாம் இந்த நிலையை அடையும் போது நமக்கு இறைமறுப்பாளர்களுடன் வாதம் செய்ய வேண்டிய தேவையே இருக்காது - இன்ஷா அல்லாஹ். ஏனென்றால், அஹ்மதிய்யத்தின் நோக்கம் மூளைகளைத் தோற்கடிப்பது கிடையாது. மாறாக, உள்ளங்களை வெற்றி கொள்வதாகும்.

இந்த வழி நீளமானது. நாம் அவநம்பிக்கை அடையக் கூடாது. எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நம்பிக்கை நிறைந்த இந்தச் சொற்களில் இந்த உரையாடலை நிறைவு செய்வோம்:

ஒரு குழந்தை பசியால் நிம்மதியிழந்து பாலுக்காக அழும்போது, கதறும்போது, தாயின் மார்பில் பால் பொங்கி வருகிறது. குழந்தைக்கு துஆவின் பெயர் கூடத் தெரியாது. ஆனால், அதன் கதறல் பாலை எவ்வாறு ஈர்த்துக் கொண்டு வருகிறது?

நம்முடைய கதறல்கள் அல்லாஹ்வுக்கு முன் இருக்கும்போது, அவற்றால் எதையும் ஈர்த்து கொண்டு வர முடியாதா? வருகிறது எல்லாம் வருகிறது. ஆனால், அறிஞர்கள் என்றும் தத்துவஞானிகள் என்றும் கூறிக் கொண்டிருக்கும் கண் பார்வையற்றவர்களால் பார்க்க முடியாது. இறைவனை வீண் பெருமையால் அன்றி, உள்ளத்தால் தேடுங்கள்.

# 700 இறை கட்டளைகள்

(தொகுப்பு: ஹனீஃப் அஹ்மது மஹ்மூது)

தமிழாக்கம்: இப்னு யூசுப்

4

### அல்லாஹ் பிறப்பு மற்றும் வம்சாவளியின் குறைபாடுகளிலிருந்து தூயவன்

لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ۙ

அவன் எவரையும் பெறவில்லை. அவன் எவராலும் பெறப்படவுமில்லை. (அல் இக்லாஸ் 112:4)

### அல்லாஹ்விற்கு பெண் குழந்தைகள் இருப்பதாகக் கூறுவது மேலும் மலக்குமார்களையும் பெண்களாக ஆக்குவது

اَفَاَصْفٰٮكُمْ رَبُّكُمْ بِالْبَنِيْنَ وَاتَّخَذَ مِنَ الْمَلٰٓٮِٕكَةِ اِنَاثًا ؕ

உங்கள் இறைவன் உங்களை ஆண் மக்க(ளின் அரு)ளைக் கொண்டு சிறப்பித்து விட்டு(த் தனக்கென) அவன் சில மலக்குகளை பெண் (மக்க)ளாக ஆக்கிக் கொண்டானா? (பனீ இஸ்ராயீல் 17:41)

فَاسْتَفْتِهِمْ اَلِرَبِّكَ الْبَنَاتُ وَلَهُمُ الْبَنُوْنَ ۙ

اَمْ خَلَقْنَا الْمَلٰٓٮِٕكَةَ اِنَاثًا وَّهُمْ شٰهِدُوْنَ

இப்பொழுது நீர் (நிராகரிப்பவர்களாகிய) அவர்களிடம், அவர்களுக்கு ஆண் மக்கள் இருக்க, உமது இறைவனுக்கு மட்டும் பெண் மக்களா என்று கேட்பீராக. அல்லது அவர்கள் சாட்சிகளாக இருக்க, நாம் வானவர்களைப் பெண்களாகப் படைத்துள்ளோமா? (அஸ்ஸாஃப்பாத் 37:150-151)

وَيَجْعَلُوْنَ لِلّٰهِ الْبَنٰتِ سُبْحٰنَهٗ ۙ

அவர்கள் அல்லாஹ்வுக்குப் பெண் மக்களை ஏற்படுத்துகின்றனர். அவன் (அதிலிருந்து) தூய்மையானவன். (அந் நஹ்ல் 16:58)

اَمْ لَهُ الْبَنٰتُ وَلَكُمُ الْبَنُوْنَ ؕ

அவனுக்குப் பெண் பிள்ளைகளும், உங்களுக்கு ஆண் பிள்ளைகளுமா? (அத்தூர் 52:40)

اَمِ اتَّخَذَ مِمَّا يَخْلُقُ بَنٰتٍ وَّاَصْفٰكُمْ بِالْبَنِيْنَ

அவன் படைத்ததிலிருந்து பெண் மக்களை அவன் எடுத்துக் கொண்டு ஆண் மக்களைக் கொண்டு உங்களைச் சிறப்பித்துள்ளானா? (அஸ்ஸுஃக்ருஃப் 43:17)

### அல்லாஹ்விற்கு எந்த மனைவியும் இல்லை

وَّاَنَّهٗ تَعٰلٰى جَدُّ رَبِّنَا مَا اتَّخَذَ صَاحِبَةً وَّلَا وَلَدًا ۙ

உண்மையிலேயே எங்கள் இறைவனின் மகிமை மிகவும் உயர்ந்ததாகும். அவன் தனக்காக மனைவியையோ, மகனையோ எடுத்துக் கொள்ளவில்லை. (அல் ஜின் 72:4)

### மலக்குமார்களையும் நபிமார்களையும் இறைவனாக ஆக்காதீர்கள்

وَلَا يَاْمُرَكُمْ اَنْ تَتَّخِذُوا الْمَلٰٓٮِٕكَةَ وَالنَّبِيّٖنَ اَرْبَابًا ؕ

اَيَاْمُرُكُمْ بِالْـكُفْرِ بَعْدَ اِذْ اَنْتُمْ مُّسْلِمُوْنَ ࣖ

நீங்கள் வானவர்களையும், நபிமார்களையும் கடவுள்களாக ஆக்கிக் கொள்ளுங்கள் என்று உங்களுக்குக் கட்டளையிடுவதும் (அவரால்) இயலாது. நீங்கள் (இறைவனுக்குக்) கட்டுப்பட்டதன் பின்னர், நிராகரிக்குமாறு உங்களை அவர் ஏவுவாரா? (ஆல இம்ரான் 3:81)



### தீமை(சிலை)களை விட்டு விலகி இருத்தல்

وَلَقَدْ بَعَثْنَا فِىْ كُلِّ اُمَّةٍ رَّسُوْلًا اَنِ اعْبُدُوا اللّٰهَ وَاجْتَنِبُوا الطَّاغُوْتَ ۚ

(மக்களே) நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள் மேலும் ஒவ்வொரு வரம்பு மீறுபவர்களை விட்டும் விலகியிருங்கள் (என்ற இந்த கட்டளையுடன்) ஒவ்வொரு சமுதாயத்திற்கும் நிச்சயமாக நாம் (எதாவது ஒரு) தூதரை அனுப்பினோம். (அந் நஹ்ல் 16:37)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மொழியாக்கம்

நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள் சிலைகளை விட்டு விலகுங்கள் என்ற கட்டளையுடன் ஒவ்வொரு

சமுதாயத்திற்கும் நிச்சயமாக நாம் தூதரை அனுப்பினோம். (அந் நஹ்ல் 16:37)

ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் மொழியாக்கம்

### சிலைகளின் அசுத்தத்திலிருந்து தவிர்ந்து கொள்ளுதல்

فَاجْتَنِبُوا الرِّجْسَ مِنَ الْأَوْثَانِ

எனவே நீங்கள் சிலை வணக்கமான இணை வைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். (அல் ஹஜ் 22:31)

وَالَّذِينَ اجْتَنَبُوا الطَّاغُوتَ أَن يَعْبُدُوهَا وَأَنَابُوا إِلَى اللَّهِ لَهُمُ الْبُشْرَىٰ ۚ

மேலும் பொய்த் தெய்வங்களை வணங்காமல், அவற்றிலிருந்து விலகி, முற்றிலும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புபவர்களுக்கு நற்செய்தி உண்டு. (அஸ்ஸுமர் 39:18)

### பொய் கடவுள்களுக்கு எதிராக தெளிவான சான்றை கொண்டு வாருங்கள்

أَمِ اتَّخَذُوا مِن دُونِهِ آلِهَةً ۖ قُلْ هَاتُوا بُرْهَانَكُمْ ۖ

அவர்கள் அவனையன்றி வேறு கடவுளர்களை உருவாக்கிக் கொண்டனரா? நீர் கூறுக: உங்கள் சான்றைக் கொண்டு வாருங்கள். (அல் அன்பியா 21:25)

### உயிரற்ற சிலைகளிடமிருந்து பதில்களை எதிர்பார்ப்பது

قَالَ بَلْ فَعَلَهُ ۖ كَبِيرُهُمْ هَٰذَا فَاسْأَلُوهُمْ إِن كَانُوا يَنطِقُونَ

அவர் கூறினார்: நிச்சயமாக ஒருவர் இதனைச் செய்துள்ளார். அவர்களுள் ‘பெரிய கடவுள்’ இதோ இருக்கின்றார். அவரால் பேச முடியுமாயின், அவரிடமே கேட்டுப் பாருங்கள். (அல் அன்பியா 21:64)

குறிப்பு: இந்த வசனத்திற்கு முன்புள்ள வசனங்களைப் படித்தால் இங்கு கூறப்பட்டுள்ள கருத்து தெளிவாகும்.

### சிலைகள் தொடர்பாக அவர்களிடம் கேட்கப்பட வேண்டியவை

اللَّهُ الَّذِي خَلَقَكُمْ ثُمَّ رَزَقَكُمْ ثُمَّ يُمِيتُكُمْ ثُمَّ يُحْيِيكُمْ ۖ
هَلْ مِن شُرَكَائِكُم مَّن يَفْعَلُ مِن ذَٰلِكُم مِّن
شَيْءٍ ۚ سُبْحَانَهُ وَتَعَالَىٰ عَمَّا يُشْرِكُونَ ۚ

அல்லாஹ்வே உங்களைப் படைத்தான். பின்னர் அவனே உங்களுக்கு உணவளித்தான். பின்னர் அவன் உங்களை மரணிக்கச் செய்வான். பின்னர் அவன் உங்களை உயிர் பெறச் செய்வான். உங்களால் (இறைவனுக்கு) இணையாக்கப்பட்டவர்களுள் எவரேனும் இச்செயல்களில் எதையாவது செய்கின்றாரா? அவன் தூய்மையானவன். மேலும் அவர்கள் (அவனுக்கு) ஏற்படுத்தும் இணைகளை விட்டும் அவன் மிக்க மேலானவன். (அர் ரூம் 30:41)

### வணக்கத்திற்கு தகுதியுடைவர் யார்? நேர்வழிப்படுத்தக் கூடியது சிலையா அல்லது இறைவனா?

قُلْ هَلْ مِن شُرَكَائِكُم مَّن يَهْدِي إِلَى الْحَقِّ ۚ قُلِ اللَّهُ يَهْدِي لِلْحَقِّ ۗ أَفَمَن يَهْدِي
إِلَى الْحَقِّ أَحَقُّ أَن يُتَّبَعَ أَمَّن لَّا يَهِدِّي إِلَّا أَن يُهْدَىٰ ۖ فَمَا لَكُمْ كَيْفَ تَحْكُمُونَ

நீர் கூறுவீராக! உங்களால் (இறைவனுக்கு) இணை -யாக்கப்பட்டவர்களுள் உண்மையின்பால் வழிகாட்டுபவர் எவராவது இருக்கின்றாரா? நீர் கூறுவீராக! அல்லாஹ்(வே) உண்மையின்பால் வழிகாட்டுகின்ற (இறைவனாகிய) அவன், பின்பற்றப்படுவதற்கு மிகவும் உரிமை பெற்றவனா? அல்லது தமக்கு நேர்வழிகாட்டப்பட்டாலன்றி (தாமாக) நேர்வழியினைப் பெறாத ஒருவரா? உங்களுக்கு என்ன (நேர்ந்து விட்டது)? நீங்கள் எவ்வாறு தீர்ப்புகள் வழங்குகின்றீர்கள்? (யூனுஸ் 10:36)



### உயிரற்ற சிலை பயனும் அளிக்க முடியாது அழிவையும் ஏற்படுத்த முடியாது

وَلَئِن سَأَلْتَهُم مَّنْ خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ لَيَقُولُنَّ اللَّهُ ۚ قُلْ أَفَرَأَيْتُم مَّا
تَدْعُونَ مِن دُونِ اللَّهِ إِنْ أَرَادَنِيَ اللَّهُ بِضُرٍّ هَلْ هُنَّ كَاشِفَاتُ ضُرِّهِ أَوْ أَرَادَنِي
بِرَحْمَةٍ هَلْ هُنَّ مُمْسِكَاتُ رَحْمَتِهِ ۚ قُلْ حَسْبِيَ اللَّهُ ۖ عَلَيْهِ يَتَوَكَّلُ الْمُتَوَكِّلُونَ

வானங்களையும், பூமியையும் படைத்தவன் எவன் என்று நீர் அவர்களிடம் வினவினால், நிச்சயமாக அவர்கள், அல்லாஹ் என்று கூறுவார்கள். நீர் கூறுவீராக! அல்லாஹ் எனக்குத் தீங்கிழைக்கக் கருதினால், அல்லாஹ்வையன்றி நீங்கள் எவற்றை அழைக்கின்றீர்களோ அவற்றால் அவனது தீங்கை அகற்றி விட முடியுமா? அல்லது அவன் எனக்குக் கருணை காட்டக் கருதினால், அவற்றால் அவனது கருணையைத் தடுத்து விட முடியுமா? நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? நீர் கூறுவீராக! எனக்கு அல்லாஹ் போதுமானவன். நம்பிக்கை வைப்பவர்கள் அவனிடமே நம்பிக்கை வைக்க வேண்டும். (அஸ் ஸுமர் 39:39)

وَلَا تَدْعُ مِن دُونِ اللَّهِ مَا لَا يَنفَعُكَ وَلَا يَضُرُّكَ ۖ فَإِن فَعَلْتَ
فَإِنَّكَ إِذًا مِّنَ الظَّالِمِينَ

மேலும், அல்லாஹ்வையன்றி உமக்கு பயன் அளிக்காததும், தீங்கிழைக்காததுமான எதையும் நீர் அழைக்க வேண்டாம். நீர் (அவ்வாறு) செய்தால், அந்நிலையில் நிச்சயமாக நீர் அநீதி இழைப்பவர்களைச் சேர்ந்தவராவீர். (யூனுஸ் 10:107)

قُلْ فَمَنْ يَّمْلِكُ لَكُمْ مِّنَ اللّٰهِ شَيْـًٔا اِنْ اَرَادَ بِكُمْ ضَرًّا اَوْ اَرَادَ بِكُمْ نَفْعًا ؕ بَلْ كَانَ اللّٰهُ بِمَا تَعْمَلُوْنَ خَبِيْرًا

நீர் கூறுவீராக! அல்லாஹ் உங்களுக்கு ஏதேனும் தீங்கைச் செய்ய நாடினால் அல்லது அவன் உங்களுக்கு ஏதேனும் நன்மையைச் செய்ய நாடினால், அவனுக்கு எதிராக உங்களுக்கு ஏதேனும் செய்ய ஆற்றல் பெற்றவன் எவன்? அவ்வாறன்று. மாறாக, நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கு அறிபவனாவான். (அல் ஃபத்ஹ் 48:12)

وَاتَّخَذُوْا مِنْ دُوْنِهٖۤ اٰلِهَةً لَّا يَخْلُقُوْنَ شَيْـًٔا وَّهُمْ يُخْلَقُوْنَ وَلَا يَمْلِكُوْنَ لِاَنْفُسِهِمْ ضَرًّا وَّلَا نَفْعًا وَّلَا يَمْلِكُوْنَ مَوْتًا وَّلَا حَيٰوةً وَّلَا نُشُوْرًا

இருந்தும் அவர்கள் அவனைத் தவிர (வேறு) கடவுளரை உருவாக்கிக் கொண்டனர். அக்கடவுளர் எதனையும் படைப்பதில்லை. அவர்களே படைக்கப்படுகின்றனர். அவர்கள் தங்களுக்குத் தீங்கிழைப்பதற்கும், பயனளிப்பதற்கும் ஆற்றல் பெறாதவர்கள். மேலும் அவர்களுக்கு மரணத்திலும், வாழ்விலும், பின்னர் உயிர் பெற்றெழுவதிலும் எந்த அதிகாரமும் இல்லை. (அல் ஃபுர்கான் 25:4)

وَيَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ مَا لَا يَنْفَعُهُمْ وَلَا يَضُرُّهُمْ ؕ وَكَانَ الْكَافِرُ عَلٰى رَبِّهٖ ظَهِيْرًا

(நிராகரிப்பவர்களாகிய) அவர்கள் தங்களுக்கு எந்தப் பலனோ, எந்தத் தீங்கோ ஏற்படுத்த முடியாதவற்றை அல்லாஹ்விற்குப் பகரமாக வணங்குகின்றனர். நிராகரிப்பவர் எப்போதும் தம் இறைவனுக்கு மாறு செய்பவராக இருக்கின்றார். (அல் ஃபுர்கான் 25:56)

قُلِ ادْعُوا الَّذِيْنَ زَعَمْتُمْ مِّنْ دُوْنِهٖ فَلَا يَمْلِكُوْنَ كَشْفَ الضُّرِّ عَنْكُمْ وَلَا تَحْوِيْلًا

நீர் (அவர்களிடம்) கூறுவீராக: அவனை விட்டு விட்டு, எவர்களைக் குறித்து (அவர்கள் இறைத் தன்மையினைக் கொண்டிருப்பதாக) வாதிக்கின்றீர்களோ அவர்களை (உங்கள் உதவிக்காக) அழைத்துப் பாருங்கள். (அப்போது) அவர்களால் (உங்களுடைய எந்தத்) துன்பத்தை(யும்) உங்களை விட்டும் அகற்றவோ (உங்கள் நிலையில்) எந்த மாற்றத்தையும் உண்டாக்கவோ முடியாது (என்பதை நீங்கள் அறிவீர்கள்). (பனீ இஸ்ராயீல் 17:57)

قَالَ اَفَتَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ مَا لَا يَنْفَعُكُمْ شَيْـًٔا وَّلَا يَضُرُّكُمْ ؕ

அதற்கு (இப்ராஹீம்) கூறினார்: அவ்வாறாயின் உங்களுக்கு எந்த நன்மையையோ தீமையையோ செய்ய முடியாத ஒன்றையா நீங்கள் அல்லாஹ்வை விட்டு விட்டு வணங்குகிறீர்கள்? (இப்ராஹீம் 21:67)

يَدْعُوْا مِنْ دُوْنِ اللّٰهِ مَا لَا يَضُرُّهٗ وَمَا لَا يَنْفَعُهٗ ؕ ذٰلِكَ هُوَ الضَّلٰلُ الْبَعِيْدُ ۚ

அவர்கள் அல்லாஹ்வை விட்டு விட்டு தங்களுக்குத் தீங்களிக்காததும், தங்களுக்குப் பயனளிக்காததுமாகிய ஒன்றினை அழைக்கின்றனர். இது மிகத் தூரமான வழிகேடாகும். (அல் ஹஜ்ஜ் 22:13)

وَيَوْمَ يَقُوْلُ نَادُوْا شُرَكَآءِيَ الَّذِيْنَ زَعَمْتُمْ فَدَعَوْهُمْ فَلَمْ يَسْتَجِيْبُوْا لَهُمْ وَجَعَلْنَا بَيْنَهُمْ مَّوْبِقًا

மேலும் அவன் அந்நாளில் கூறுவான்: எனக்கு இணையானவர்களென்று எவர்களை நீங்கள் எண்ணினீர்களோ அவர்களை அழையுங்கள். அதன்படி அவர்கள் அழைப்பார்கள். ஆனால் அவர்கள் இவர்களுக்குப் பதிலளிக்கமாட்டார்கள். மேலும் அவர்களுக்கிடையில் நாம் ஒரு தடையை ஏற்படுத்தி விடுவோம். (அல் கஹ்ஃப் 18:53)

### பொய் தெய்வங்களை ஏசுவது தடுக்கப்பட்டுள்ளது

وَلَا تَسُبُّوا الَّذِيْنَ يَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ فَيَسُبُّوا اللّٰهَ عَدْوًۢا بِغَيْرِ عِلْمٍ ؕ كَذٰلِكَ زَيَّنَّا لِكُلِّ اُمَّةٍ عَمَلَهُمْ ۪ ثُمَّ اِلٰى رَبِّهِمْ مَّرْجِعُهُمْ فَيُنَبِّئُهُمْ بِمَا كَانُوْا يَعْمَلُوْنَ

அல்லாஹ்வையன்றி அவர்கள் அழைப்பவற்றை நீங்கள் ஏசாதீர்கள். இல்லையாயின், அவர்கள் அறியாமையினால் அல்லாஹ்வை ஏசுவார்கள். இவ்வாறு நாம் ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் அவர்களின் செயலை அழகு வாய்ந்ததாக்கிக் காட்டியுள்ளோம். பின்னர் அவர்கள் தங்கள் இறைவனிடமே திரும்பிச் செல்ல வேண்டியவராய் உள்ளனர். அப்போது அவர்கள் செய்ததைக் குறித்து அவர்களுக்கு அறிவிப்பான். (அல் அன்ஆம் 6:109)

(தொடரும்...)



# காதியானும் அதன் புனித, வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும்

தொகுப்பு: மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர்
(அஹ்மதிய்யத் வரலாற்றுத் துறையின் பொறுப்பாளர், காதியான்)

7

தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.

## நூர் மஸ்ஜிது

இந்திய - பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்பு அதாவது 1947-ஆம் ஆண்டுக்கு முன்பு காதியானில் ஏறக்குறைய 12 மஸ்ஜிதுகள் இருந்தன. அது மட்டுமின்றி, இன்னும் பல இடங்களிலும் தொழுகைகள் நிறைவேற்றப்பட்டு வந்தன. பிரிவினைக்குப் பிறகு முபாரக் மஸ்ஜிது, அக்ஸா மஸ்ஜிது, நாஸிராபாத் மஸ்ஜிது ஆகிய மூன்று பள்ளிவாயில்களில்



ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம்

மட்டுமே ஜமாஅத்தான தொழுகைகள் நடந்து வந்தன. இப்போது 14 மஸ்ஜிதுகளில் ஜமாஅத்தான தொழுகைகள் நடைபெற்று வருகின்றன. இதன்படி, மேற்குறிப்பிட்ட மூன்று மஸ்ஜிதுகள் மட்டுமின்றி, தாருல் அன்வார், தாருல் பரகாத், தாருர் ரஹ்மத், மஸ்ஜிது நூர், தாருல் ஃபுதூஹ், மஸ்ஜிது தாருல் ஃபஸ்ல், மஸ்ஜிது மஹ்மூது, மஸ்ஜிது பஷாரத், மஸ்ஜிது தாஹிர் நங்கல், மஸ்ஜிது மஹ்தி காஹ்ல்வான், மஸ்ஜிது கோட்டி தாருஸ் ஸலாம் ஆகிய மஸ்ஜிதுகளிலும் ஜமாஅத்தான தொழுகைகள் நடைபெற்று வருகின்றன.

நூர் மஸ்ஜிதும் காதியானிலுள்ள முக்கியமான மஸ்ஜிதுகளில் ஒன்றாகும். இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க மஸ்ஜிதுக்கான அடிக்கல்லை ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 5, மார்ச் 1910 அன்று நாட்டியிருந்தார்கள். இதைக் கட்டுவதற்கு 3 ஆயிரம் ரூபாய் செலவானது. அதை மீர் நாஸிர் நவாப் சாஹிப் கொடுத்திருந்தார்கள். இந்த மஸ்ஜிது தஃலீமுல் இஸ்லாம் ஸ்கூல் மற்றும் காலேஜின் வளாகத்தில் இருக்கிறது.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மரணம் ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் அவர்களின் கோட்டீ தாருஸ் ஸலாம் (தாருஸ் ஸலாம் மாளிகை) என்ற இடத்தில் 13, மார்ச் 1914 அன்று நிகழ்ந்தது. அது காலேஜ் மற்றும் மஸ்ஜிது நூர் ஆகியவற்றின் வடக்குக் புறத்தில் அமைந்திருக்கிறது. 14, மார்ச் 1914 அன்று மஸ்ஜிது நூர் ஆகிய இந்த மஸ்ஜிதிலேயே ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் இரண்டாவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மேலும் ஏறக்குறைய 2000 பேர் அவர்களின் கையில் அந்த நேரத்திலேயே பைஅத் செய்தனர். அதற்குப் பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஜனாஸாவை ஹை ஸ்கூலின் வடக்கிலுள்ள களத்தில் தொழ வைத்தார்கள்.

இதில்தான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பெரும்பான்மை -யினர் திருக்குர்ஆன், ஹதீஸ்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்களின்படி செயல்பட்டவாறு கிலாஃபத்துடன் இணைந்திருப்பதாக உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். இதுவே அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க மஸ்ஜிது ஆகும். மற்றும் எண்ணிக்கையில் மிகக் குறைந்த சிலர் மவ்லவி முஹம்மது அலீ சாஹிப் அவர்களின் தலைமையில் கிலாஃபத்திலிருந்து முகந்திருப்பியவாறு காதியானை விட்டு விட்டு லாஹூர் சென்று விட்டனர்.

## இன்னும் சில வரலாற்றுச் சிறப்பு மிக்க நினைவூட்டும் இடங்கள்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க, புனித இடங்கள் மட்டுமின்றி, ஜமாஅத்தின் சகோதரர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க நினைவூட்டும் இடங்களையும் பார்க்கலாம். 2015-ஆம் ஆண்டு இந்தக் கட்டடங்களில் இருக்கின்ற அலுவலகங்களின் பெயர்களும் கீழே குறிப்பிடப்படுகின்றன:

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் இல்லம், லங்கர் கானாவின் கட்டடம், விருந்தினர் இல்லம், தஃலீமுல் இஸ்லாம் ஸ்கூலின் துவக்கக் கால கட்டடம் (இதில் தற்போது சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, அஞ்சுமன்


விருந்தினர் இல்லம்

தஹ்ரீகே ஜதீது, அஞ்சுமன் வக்ஃபே ஜதீது அலுவலகங்கள் ஆகியவை இருக்கின்றன). மத்ரஸாவின் துவக்க காலத்திலுள்ள கட்டடம் மோசமானதன் காரணமாக உடைக்கப்பட்டது. மேலும் மத்ரஸா அஹ்மதிய்யா (அதாவது ஜாமிஆ அஹ்மதிய்யா), சராயே தாஹிர் (தாஹிர் விடுதி) எனும் மகத்தான கட்டடத்தில் மாற்றப்பட்டிருக்கிறது. (இந்த இடம் தஃலீமுல் இஸ்லாம் ஸ்கூலின் துவக்கக் கட்டடத்தின் முற்றத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது - நூலாசிரியர்).

கஸ்ரே கிலாஃபத் (அதாவது கிலாஃபத் மாளிகை), நூர் மருத்துவமனையின் பழைய மற்றும் புதிய கட்டடம், தாருல்




அன்வார் விருந்தினர் இல்லங்கள், (இவற்றில் தற்போது தஃலீமுல் இஸ்லாம் சீனியர் செகன்டரி ஸ்கூல் இருக்கிறது). தற்போது ஜாமிஆ அஹ்மதிய்யா இருக்கின்ற சராயே தாஹிர் (தாஹிர் விடுதி), மஸ்ஜிது அன்வார் (அதாவது மஸ்ஜிது அன்வாரின் புதிய கட்டடம்), தஃலீமுல் இஸ்லாம் காலேஜ், (இது காதியான் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் சொத்தாகும். ஆனால் தற்போது இதில் சீக்கிய நேஷனல் காலேஜ் இருக்கிறது). தஹ்ரீகே ஜதீது போர்டு (இதுவும் காதியான் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் சொத்தாகும். ஆனால் இன்றைய நாளில் இதில் கால்ஸா ஹை ஸ்கூல் இருக்கிறது).

## கோட்டி தாருஸ் ஸலாம் (தாருஸ் ஸலாம் மாளிகை)

முஹல்லா தாருல் உலூமில் (தாருல் உலூம் இடத்தில் மால்யர்கோட்லாவின் நவாப் ஆகிய) ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் சாஹிப் ரலியல்லாஹு அன்ஹு மற்றும் ஹஸ்ரத்


ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மரணமடைந்த அறை

நவாப் முபாரகா பேகம் சாஹிபா (ரலியல்லாஹு அன்ஹா) ஆகியோரின் மாளிகை தாருஸ் ஸலாம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இதன் ஓர் அறையிலேயே ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தமது வாழ்க்கையின் இறுதி நாட்களைக் கழித்தார்கள். மேலும் இங்கேயே அவர்களின் மரணம் ஏற்பட்டது. இந்த மாளிகையிலிருந்தே சய்யிதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 31, ஆகஸ்டு 1947 அன்று 1:15 மணிக்கு காதியானிலிருந்து லாஹூர் பயணம் மேற்கொண்டார்கள். இந்த மாளிகையின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடத்தையும் சுற்றுலாவுக்கு வருபவர்கள் பார்க்கலாம். இப்போது அங்கு புதிய வீடுகளும், மஸ்ஜிதும் கட்டப்பட்டு விட்டன.


ஜாமிஆ அஹ்மதிய்யா

## பைத்துஸ் ஸஃபர்

காதியானிலுள்ள தாருல் அன்வார் முஹல்லாவின் துவக்கத்திலேயே ஹஸ்ரத் சவ்த்ரி சர் முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் (ரலி) அவர்களின் மாளிகையாகிய பைத்துஸ் ஸஃபர் இருக்கிறது. இன்றைய நாட்களில் இதில் பஞ்சாப் மின் வாரிய அலுவலகம் இருக்கிறது. இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டடத்தையும் வெளியிலிருந்து பார்க்கலாம்.


தாருல் அன்வார்

## ஐந்தாவது கிலா∴பத்தின் அருளுக்குரிய காலகட்டத்தில் கட்டப்படுகின்ற கட்டடங்கள்

### 1. அக்ஸா மஸ்ஜிது

காதியானிலுள்ள அக்ஸா மஸ்ஜிது விரிவுபடுத்துவது, கட்டட சீரமைப்பு ஆகியவற்றைப் பற்றி அக்ஸா மஸ்ஜிது தொடர்பான குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போது அதன் பரப்பளவு 5800 அடியாகி விட்டது. மேலும் 5,000 நபர்களுக்கும் அதிகமானவர்கள் ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்ற முடியும் - அல்ஹம்துலில்லாஹ்.

### 2. சராயே வஸீம் (வஸீம் விடுதி)



அல்லாஹ்வின் அருளால் சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப காதியானினுக்கு வரும் விருந்தினர்களின் எண்ணிக்கை அசாதாரணமாக பெருகிக் கொண்டிருக்கிறது. அவர்களில் கண்ணியத்திற்குரிய சிலருக்கு மிகச் சிறந்த முறையில் விருந்தோம்பல் செய்வதை கருத்தில் கொண்டவாறு புதிய தேவைகளுக்கேற்ப 21, நவம்பர் 2007 அன்று ஒரு கட்டடம் கட்ட துவங்கப்பட்டது. அது ஏப்ரல் 2009 அன்று முழுமை அடைந்தது. மேலும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அதற்கு சராயே வஸீம் (வஸீம் விடுதி) என்று பெயரிட்டார்கள். இந்த கட்டடம் 35 அறைகளையும் அவற்றில் குளியலைறையும், கழிப்பிடங்களையும் கொண்டதாக இருக்கிறது. முதல் தளத்தில் வருகை தருபவர்கள், விருந்தினர்கள் ஆகியோரை வரவேற்பதற்காக அழகிய ஹால் இருக்கிறது.

### 3. நுஸ்ரத் ஜஹான் ஹால் மற்றும் லஜ்னா இமாயில்லாஹ் கெஸ்டு ஹவுஸ் (சராயே முபாரகா - முபாரகா விடுதி)

காதியானிலிருந்து ஹரிச்வால் ரோட்டிற்கு தெற்குப் புறத்தில் ஓர் அழகான கண்ணுக்கு எழிலூட்டக் கூடிய கட்டடம் ஜூலை 2008-ல் துவங்கியது. மேலும் அது டிசம்பர் 2009 அன்று நிறைவடைந்தது. லஜ்னா இமாயில்லாஹ் அமைப்பின் இஜ்திமாக்கள், ஜல்ஸாக்கள் ஆகியவை இந்த கட்டடத்தில்தான் நடைபெறுகின்றன. மேலும் லஜ்னா பொறுப்பாளர்களாக இருக்கும் விருந்தினர்களுக்கு தங்குவதற்கான ஏற்பாடும் இந்த கட்டடத்திலுள்ள விருந்தினர் இல்லத்தில் இருக்கிறது. ஹாலின் மொத்த பரப்பளவு 3680 சதுர அடி, கெஸ்டு ஹவுஸ் கட்டடத்தின் மொத்த பரப்பளவு 2690 சதுர அடி ஆகும்.

### 4. ∴பஸ்லே உமர் பிரின்டிங் பிரஸ் கட்டடம்

ஹரிச்வால் ரோட்டிலேயே வடக்குப் புறத்தில் ஒரு பரந்த அழகிய கட்டடம் 2008-ல் கட்டப்பட்டது. இது ∴பஸ்லே உமர் பிரின்டிங் பிரஸின் கட்டடம் ஆகும். ∴பஸ்லே உமர் பிரஸிலும் அச்சிடுவதற்காக மிக நவீனமான இயந்திரம் நிறுவப்-பட்டுள்ளது. அதன் காரணமாக ∴பஸ்லே உமர் பிரஸின் அச்சிடுவதன் தரம் மிகவும் உயந்ததாகவும், சிறப்பாகவும் இருக்கிறது.

### 5. கிலா∴பத் ஜுபிலியின் நினைவூட்டும் கேட்




அஹ்மதிய்யா கிலா∴பத்-தின் நூற்றாண்டு கொண்-டாட்டத்தின்போது பாபுல் அப்வாப் முஹல்லாவில் துவக்கத்திலேயே ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க கேட் கட்டப்பட்டது. இதற்கான அடிக்கல் 27, ஜனவரி 2008 அன்று நாட்டப்-பட்டது. மேலும் இது அக்டோபர் 2010 அன்று முழுமை அடைந்தது. கேட்டின் உயரம் 46 அடியும், அகலம் 28 அடியும் கொண்டது.

### 6. மர்கஸீ லைப்ரேரியின் புதிய கட்டடம் (மேலிட நூலகத்தின் புதிய கட்டடம்)



இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு கஸ்ரே கிலா∴பத்தில் (கிலா∴பத் மாளிகையில்) மர்கஸீ லைப்ரேரி (தலைமையக நூலகம்) இருந்தது. 21, நவம்பர் 2007 தாருல் அன்வார் முஹல்லாவில் நூலகத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அது அக்டோபர் 2010 அன்று முழுமை பெற்றது. மேலிட நூலகம் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்ட பிறகு நூலகத்திலிருந்து பயன்பெறுபவர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இந்தக் கட்டடத்திலேயே ஷு∴பாயே தாரீக் பராயே தத்வீனே தாரீகே அஹ்மதிய்யத் பாரத் (இந்திய அஹ்மதிய்யத் வரலாறு சீரமைக்கும் துறை) என்ற

அலுவலகமும் இருக்கிறது. இந்த கட்டடத்தின் பரப்பளவு நிலப்பரப்பில் 10,660 சதுர அடி ஆகும். மேலும் இதே அளவிலான பரப்பளவு முதல் தளத்திலும் இருக்கிறது.

### 7. M.T.A கட்டடம்



தாருல் அன்வார் முஹல்லாவிலேயே அழகானதும், நவீன தேவைகளுக்கும் ஏற்ப ஒன்றிரண்டு தளங்களைக் கொண்ட கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதற்கு 30, ஜூன் 2006 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. மேலும் இதன் கட்டடப் பணி டிசம்பர் 2008 அன்று முழுமையடைந்தது. இந்தக் கட்டடத்தில் முதல் தளத்தில் நஷ்ரோ இஷாஅத் ஸ்டுடியோ இருக்கிறது. இந்த ஸ்டுடியோவிலிருந்தே 'ராஹே குதா' நிகழ்ச்சி நேரலை ஆக காதியானிலிருந்து ஒளிபரப்பாகின்றது. இந்தக் கட்டடத்தின் வடக்கு திசையில் அல்குர்ஆன் நுமாயிஷ் (அல்-குர்ஆன் கண்காட்சி), மக்ஸனே தஸாவீர் (நிழற்படங் -களின் கருவூலம்) ஆகியவை இருக்கின்றன. அவை பார்க்கத் தகுந்தவையாகும். வருகை தருபவர்கள் இதிலிருந்தும் பயன் பெற வேண்டும்.

### 8. மொரூஷியஸ் கெஸ்டு ஹவுஸ் (சராயே உபைதுல்லாஹ் - உபைதுல்லாஹ் விடுதி) மற்றும் ஆஸ்திரேலியா கெஸ்டு ஹவுஸ்

அவ்வாறே தாருல் அன்வார் முஹல்லாவிலேயே மொரூஷியஸ் கெஸ்டு ஹவுஸ் (சராயே உபைதுல்லாஹ் - உபைதுல்லாஹ் விடுதி) மற்றும் ஆஸ்திரேலியா கெஸ்டு ஹவுஸ் ஆகியவை கட்டப்பட்டுள்ளன.

### 9. புயூத்துஷ் ஷுக்ர்

ஆஸ்திரேலியா கெஸ்டு ஹவுஸின் தென் கிழக்கு திசையில் 'புயூத்துஷ் ஷுக்ர்' 24 அடுக்ககங்களைக் கொண்ட கட்டடம் 2012-ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளது.

### 10. ரொட்டி பிலான்ட் கட்டடம் (ரொட்டி ஆலை கட்டடம்)

காதியான் ஆண்டு மாநாட்டுக்கு வருபவர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகமாகிக் கொண்டிருகின்றது. அவர்களுக்கு நல்ல, உயர்தரமான ரொட்டி வழங்குவதற்காக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் லெப்னானிலிருந்து ஒரு நவீன மெஷின் வாங்குவதற்கான அனுமதியை வழங்கினார்கள். அதன்படி, இந்த நவீன மெஷினை பொருத்துவதற்காக காதியானிலுள்ள தாருல் அன்வார் முஹல்லாவில் மிகப் பரந்த, அகலமான கட்டடம் கட்டுவதற்கான திட்டம் தீட்டப்பட்டது. அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் பரிவுடன் ஒப்புதல் வழங்கியிருந்தார்கள்.



அதன்படி, இந்தியா டெஸ்க் பொறுப்பாளர் மதிப்பிற்குரிய ஃபாதிஹ் சாஹிப் (தற்போது இந்தியா, நேபாளம் மற்றும் பூடானுக்கான வக்கீல் சாஹிப் தஃமீலோ தன்ஃபீஸ்) அவர்கள் 10, ஏப்ரல் 2010 அன்று கட்டடத்தின் அடிக்கல் நாட்டினார்கள். கட்டடம் கட்டப்பட்ட பிறகு எல்லா மிஷின்களும் பொருத்தப்பட்ட பின்னர் மதிப்பிற்குரிய வக்கீல் தஃமீலோ தன்ஃபீஸ் சாஹிப் 11, நவம்பர் 2012 அன்று அதை திறந்து வைத்தார்கள். மேலும் திறப்பு விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு நவீன மெஷினில் சுட்ட புதிய அழகான சுடச் சுட இருக்கும் ரொட்டிகள் சாப்பிடக் கொடுக்கப்பட்டன. இந்த மெஷின் பொருத்தப்பட்டத்தைப் பார்த்து சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்தக் கவிதை நினைவுக்கு வருகிறது:

لُفَاظَاتُ الْمَوَائِدِ كَانَ أُكُلِي     وَصِرْتُ الْيَوْمَ مِطْعَامَ الْأَهَالِي

(லுஃபாஸாதுல் மவாயிதி கான உக்லீ. வசிர்த்துல் யவ்ம மித்ஆமல் அஹாலீ)

பொருள்: ஒரு காலத்தில் உணவு விரிப்பில் எஞ்சிய உணவு எனக்கு உணவாக இருந்தது. இன்று நான் பல வீட்டினர்களுக்கு உணவு வழங்குபவனாக ஆகி விட்டேன்.

### 11. குல்ஷனே அஹ்மது (அஹ்மதின் மலர்த் தோட்டம்)

'தாருல் மஸீஹ்'-ன் தென்மேற்கு திசையில் பழைய காலத்து மாளிகைகளைப் போன்று ஒரு பரந்த கட்டடம் இருந்தது. மேலும் இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சிறிய தந்தையின் சகோதரர்களாகிய



அஹ்மதின் மலர்த் தோட்டம்

மிர்ஸா இமாம் தீன், மிர்ஸா நிஸாம் தீன் ஆகியோருக்கு உரியதாக இருந்தது. துரதிஷ்டவசமாக இந்த இரு சகோதரர்களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை மிகவும் எதிர்த்து வந்தனர். எதுவரையெனில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வீட்டிற்கும், முபாரக் மஸ்ஜிதுக்கும் செல்லும் வழியை ஒரு சுவர் எழுப்பி அடைத்து விட்டனர். அது பின்னர் நீதிமன்றத்தின் தீர்ப்பினால் தகர்க்கப்பட்டது. தனது காலத்தின் உயர்ந்த மகத்துவமிக்க கட்டடத்தில் இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா 'நுஸ்ரத் கேர்ல்ஸ் ஸ்கூலை' துவக்கியது. அது 7, ஜனவரி 2012 வரை நிலைபெற்றிருந்தது.

காலம் கடந்து செல்ல செல்ல மிர்ஸா நிஸாமுத்தீனின் கட்டடம் மிகவும் பாழடைந்து போய்விட்டது. எனவே அதை அகற்றிய பிறகு அதை தகர்ப்பதற்கான நடவடிக்கையும் உடனேயே துவங்கியது. மேலும் அங்கு ஓர் அழகிய தோட்டத்தை உருவாக்குவதற்கான திட்டமும் ஆயத்தமானது. முஹாஸிப் (கணக்கர்) அலுவலகத்திற்கு முன்னால் தெற்கு திசையில் ஒரு முற்றம் முன்னரே குல்ஷனே அஹ்மது (அஹ்மதின் தோட்டம்) என்ற பெயரில் இருந்தது. விரிவுபடுத்தப்பட்ட இந்தப் பகுதியைச் சமதளமாக்கப்பட்ட பிறகு தோட்டம் உருவாக்குவதற்காக (தற்போதைய வக்கீல் சாஹிப் த.ஃமீலோ தன்.ஃபீஸ்) மதிப்பிற்குரிய ஃபாத்திஹ் அஹ்மது சாஹிப் அவர்கள் 10, ஏப்ரல் 2012 அன்று துஆக்கள் செய்து அடிக்கல் நாட்டினார்கள். இது மிகவும் அழகான பச்சைப் பசுமையான மலர்த் தோட்டம் ஆகும்.

## ஹோஷ்யார்பூர்

ஹோஷ்யார்பூர் என்பது பஞ்சாபின் ஒரு புகழ்பெற்ற நகரம் ஆகும். இந்த நகரத்தின் பெருமையும், சிறப்பும் என்னவெனில், சய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்-பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதன் ஒரு வீட்டில் 40 நாட்கள் இறைவணக்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அதற்குப் பிறகு இந்த நகரத்திலிருந்தே 20, பிப்ரவரி 1886-ஆம் தேதிய (ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பிறப்பு பற்றிய) புகழ்பெற்ற பிரசுரத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வெளியிட்டார்கள்.

காதியானிலிருந்து ஹோஷ்யார்பூர் நகரம் 70 கி.மீ தொலைவில் இருக்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜனவரி 1886 அன்று ஹோஷ்யார்பூர் நகரத்துக்கு செல்லும்போது படகு மூலமாக பியாஸ் நதியை கடந்து சென்றார்கள். இப்போது இந்த பியாஸ் நதியில் உறுதியான பாலம் கட்டப்பட்டு விட்டது. அதன் காரணமாக காதியானிலிருந்து ஹோஷ்யார்பூருக்கு டாக்ஸி மூலமாக ஒன்றரை இரண்டு மணி நேரத்திற்குள் சென்றடைந்து விடலாம்.

1886-ஆம் ஆண்டு ஜனவரியில் ஹுஸூர் (அலை) அவர்கள் தனித்திருந்து இறைவணக்கத்தில் ஈடுபடுவதற்காக சென்றிருந்தபோது, ஹுஸூர் (அலை) அவர்களுடன் சன்னோர் என்ற இடத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஷேக் ஹாமிது அலி சாஹிப் (ரலி) அவர்கள், மியான் ஃபதஹ் கான் சாஹிப் அவர்களும் இருந்தார்கள். ஹோஷ்யார்பூரின் தலைவர் ஷேக் மெஹர் அலீ தவீலா என்ற பெயரால் புகழ்பெற்றிருந்த தமது ஒரு வீட்டை காலி செய்து விட்டார். ஹுஸூர் (அலை) அவர்கள் அந்த அறையில் 40 நாட்கள் துஆக்கள் செய்தார்கள். மேலே உள்ள இடத்தில் என்னிடம் எவரும் வர வேண்டாம் எனவும், எனது சாப்பட்டை மேலே கொண்டு வாருங்கள் ஆனால் நான் சாப்பாடு சாப்பிடட்டும் என்று எவரும் எதிர்பார்த்திருக்க வேண்டாம் காலியான பாத்திரத்தை பின்னர் இன்னொரு நேரத்தில் எடுத்துச் செல்லுங்கள் என்றும், தொழுகையை நான் தனியாகத் தொழுவேன். நீங்கள் கீழே தொழுது கொள்ளுங்கள் எனவும் ஜுமுஆவுக்காக நகரத்தை விட்டு தனியாக இருக்கும் ஏதாவது ஒரு மஸ்ஜிதை தேடுங்கள் எனவும், அங்கு நாம் தனியாக தொழுகை நிறைவேற்றுவோம் எனவும் ஹுஸூர் (அலை) அவர்கள் வழிகாட்டல் வழங்கி இருந்தார்கள். அதன்படி, நகரத்திற்கு வெளியே ஒரு தோட்டம் இருந்தது. அதில் ஒரு மஸ்ஜிது இருந்தது. அங்கு வெள்ளிக்கிழமை ஹுஸூர் (அலை) அவர்கள் சென்று வந்தார்கள். மேலும் எங்களுக்குத் தொழ வைத்து வந்தார்கள். மேலும் அவர்களே குத்பாவும் கொடுத்து வந்தார்கள்.



ஹோஷ்யார்பூரில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) தனித்திருந்து இறைவணக்கத்தில் ஈடுபட்ட அறை

(தொடர்ச்சி 22-ஆம் பக்கம்...)

# சிறுவர் பகுதி

# மார்க்க அறிவுப் புத்தகம்




தமிழாக்கம்: M.M. இப்ராஹீம்

## 4. அஹ்மதிய்யத்

31. ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்கள் முன்னறிவித்த படி மரணமடைந்த சில எதிரிகளின் பெயர் கூறுக:

    1) பண்டிட் லேக்ராம் - இவர் ஆரிய சமாஜ் இயக்கத்தின் தலைவர்களுள் ஒருவர் ஆவார்.

    2) டாக்டர் அலெக்ஸாண்டர் டூயீ - இவர் அமெரிக்காவில் வசித்து வந்த ஒரு பொய்வாதி.

    3) ரெவரெண்ட் அப்துல்லாஹ் ஆத்தம் - இவர் ஒரு கிறித்தவ பாதிரியார்.

    4) ஸஅதுல்லாஹ் - இவர் லூதியனாவிலுள்ள ஓர் ஆசிரியர்.

32. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் “மினனுர் ரஹ்மான்” என்னும் நூல் எதைப் பற்றி விளக்குகிறது?


خلق الانسان علمه البیان
منن الرحمن
جسمیں
عربی کو ام الالسنہ ثابت کیا گیا ہے
تصنیف لطیف حضرت مرزا غلام احمد مسیح موعود علیہ السلام
باجازت حضرت خلیفۃ المسیح الثانی ایدہ اللہ بنصرہ العزیز
مینیجر بکڈپو تالیف و اشاعت قادیان نے شائع کیا
۲۸ جون ۱۹۲۲ء ... ۱۳۴۰ھ

இந்நூலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அரபி மொழியே அனைத்து மொழிகளின் தாய் மொழி என்று நிரூபித்துள்ளார்கள். பிற மொழிகள் அனைத்தும் அரபி மொழியிலிருந்து தான் தோன்றின என்பதையும் நிரூபித்துள்ளார்கள்.

33. மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி என்பவர் யார்?

அஹ்லே ஹதீஸ் பிரிவைச் சேர்ந்த அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எதிரிகளுள் ஒருவர் ஆவார்.

34. இமாம் மஹ்தி அவர்கள் தோன்றும் காலம் குறித்த முன்னறிவிப்பை விளக்குக:

வானம் பூமி ஆகியன படைக்கப்பட்ட நாள் முதல் இதுவரை ஒருபோதும் நிகழ்ந்திராத அடையாளம் எமது மஹ்திக்கு உரியதாகும். அதாவது சந்திர கிரகணத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இரவுகளில் முதல் இரவில் சந்திர கிரகணமும், சூரிய கிரகணத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட நாட்களில் மத்திய நாளில் சூரிய கிரகணமும் நிகழும். இவ்விரண்டும் ரமலான் மாதத்தில் நிகழும். (ஆதாரம்: தாரே குத்னி பக்கம் 188)

35. மேற்குறிப்பிட்ட அடையாளம் எப்போது நிகழ்ந்தது?

ஹிஜ்ரி 1311-ல் அதாவது கி.பி. 1894-ல் இந்த முன்னறிவிப்பு நிறைவேறியது. சந்திர கிரகணத்திற்கு குறிப்பிடப்பட்ட இரவுகளில் முதல் இரவான 13-ஆம் இரவிலும், சூரிய கிரகணத்திற்கு குறிக்கப்பட்ட நாட்களில் மத்திய நாளான 28-ஆம் தினத்திலும் ரமலான் மாதத்தில் நிறைவேறியது.

36. குரு நானக் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அறிவித்தது யாது?

உண்மையில் குரு நானக் அவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவினார்கள். இஸ்லாம் மதத்தவர்களுடன் இடைவிடாது தொடர்பு வைத்திருந்தார்கள். இஸ்லாமியப் புனிதத் தலங்களைத் தரிசித்தார்கள். ஹஜ் செய்தார்கள். இஸ்லாமியர்களுடன் கூட்டுத் தொழுகைகளில் கலந்து கொண்டார்கள். அவர்களது ஆடைகளில் புனித குர்ஆன் வசனங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

37. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் குறித்து ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எழுதிய நூல் யாது?




ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் மரணிக்கவில்லை. அவர்கள் சிலுவையிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். அதன் பின்பு காணாமற் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரைத் தேடி கிழக்கு நோக்கி இந்தியா முதலிய நாடுகளின் திசை நோக்கி

பயணம் செய்து காஷ்மீரில் குடியேறினார்கள். அங்கு இயற்கை மரணமடைந்தார்கள். அவர்களின் கல்லறை காஷ்மீரில் ஸ்ரீநகரில் உள்ள கான்யார் வீதியில் உள்ளது என்று தெரிவித்தார்கள்.

38. இவ்விஷயங்களை நமக்குத் தெரிவிக்கும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் நூலைக் குறிப்பிடுக:

‘இந்தியாவில் இயேசு’ என்னும் நூலாகும். இந்நூலில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையிலிருந்து காப்பாற்றப்பட்டதைக் குறித்தும், சிலுவைச் சம்பவத்திற்குப் பின்னுள்ள அவர்களது வாழ்க்கையையும் அவர்கள் காஷ்மீர் வந்தடைந்தது பற்றியும் விளக்குகிறார்கள்.

39. 1896-ல் லாஹூரில் நடைபெற்ற அனைத்து மதங்கள் மாநாட்டில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் அனை-வரும் வியக்கும் அளவில் வாசிக்கப்பட்ட கட்டுரை யாது? அது என்ன பெயரில் வெளியிடப்பட்டுள்ளது?




அந்தக் கட்டுரை ‘இஸ்லாமி உஸூல் கி ஃபிலாசஃபி’ (இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம்) என்பதாகும்.

40. அந்த மாநாட்டில் இந்தக் கட்டுரையை வாசித்தவர் யார்?

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாகவும் மாநாட்டில் கலந்து கொள்ள முடியவில்லை. அவர்களுடைய சஹாபிகளில் ஒருவரான மவ்லவி அப்துல் கரீம் ஸியால்கோட்டி சாஹிப் அவர்கள் அன்னார் சார்பாக இந்தக் கட்டுரையை வாசித்தார்கள். இந்தக் கட்டுரையே மிகவும் வெற்றி பெற்ற கட்டுரையாக அம்மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

41. ‘மார்ட்டின் கிளார்க்’ என்பவர் யார்?

‘மார்ட்டின் கிளார்க்’ என்பவர் இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசரஸ் நகரைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவ பாதிரியாவார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒருவரைக் கொலை செய்ய தம்மைத் தூண்டி விட்டார்கள் என்ற பொய்க் குற்றச்சாட்டை ஏற்படுத்தியவர் இவர் ஆவார்.

42. இந்த வழக்கு எங்கே கொண்டு வரப்பட்டது? அதன் முடிவு என்ன?

குர்தாஸ்பூர் மாவட்டத்தின் துணை ஆணையரான கேப்டன் டக்லஸ் (Captain Douglas) என்பவர் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு வந்தது. அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் குற்றமற்றவர் என்று விடுதலை செய்து விட்டு தாங்கள் விரும்பினால் மார்ட்டின் கிளார்க் மீது வழக்கு தொடரலாம் என்று தெரிவித்தார்.

43. லேக்ராம் என்பவர் யார்?

லேக்ராம் என்பவர் ஆர்ய சமாஜ தலைவர்களுள் ஒருவராவார். இவர் இஸ்லாத்தின் தூய ஸ்தாபகர் அவர்களைத் தீய மொழிகளில் வசைபாடி வந்தார்.

44. லேக்ராமைப் பற்றி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் என்ன முன்னறிவிப்பு செய்தார்கள்?

‘இன்றிலிருந்து ஆறு வருடங்களுக்குள் இவர் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட முறையில் மரணிப்பார்’ என்று அறிவித்தார்கள். மேலும் அந்நாள் ஒரு பெருநாளுக்கு முன்னாளாகவோ பின்னாளாகவோ வரும் என்றார்கள்.

45. அந்த முன்னறிவிப்பு எப்போது நிறைவேறியது?

1897-ஆம் ஆண்டு மார்ச் 6-ஆம் தேதி லாஹூரில் உள்ள மக்கள் நெருக்கம் நிறைந்த லேக்ராமின் சொந்த வீட்டில் வைத்து அவர் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

46. டாக்டர் அலெக்ஸாண்டர் டூயீ என்பவர் யார்?

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தானே என்று பொய்யாக வாதம் செய்தவர் ஆவார். இவர் இஸ்லாம் மார்க்கத்தை இப்பூமியிலிருந்து துடைப்பதற்காக தான் தோற்றுவிக்கப்பட்டுள்ளதாகத் அறிவித்தார்.

47. டாக்டர் அலெக்ஸாண்டர் டூயீ என்பவருடன் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் நடத்திய பிரார்த்தனைப் போட்டியின் முடிவென்ன?

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் முன்னறிவித்ததற்கிணங்க 1904-ஆம் ஆண்டு மார்ச் மாதம் பரிதாபமாக இறந்தார்.

48. டாக்டர் அலெக்ஸாண்டர் டூயீயால் நிர்மாணிக்கப்பட்ட நகரம் எது?

அவர் ‘ஸியோன்’ (Zion) என்ற நகரத்தை ஸ்தாபித்தார்.


49. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு ஆங்கிலத்தில் வரப் பெற்ற இறையறிவிப்பு யாது?

‘I shall give you a large party of Islam’ என்பதாகும்.

50. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் ஐந்து சஹாபிகளின் பெயர் தருக:

1) ஹஸ்ரத் மவ்லானா ஹக்கீம் நூருத்தீன் (ரலி)
2) ஹஸ்ரத் முஃப்தீ முஹம்மது சாதிக் (ரலி)
3) ஹஸ்ரத் மவ்லானா ஷேர் அலீ (ரலி)
4) ஹஸ்ரத் மவ்லவி ஸர்வர் ஷாஹ் (ரலி)
5) ஹஸ்ரத் ஷேக் யாகூப் அலீ (ரலி)

(தொடரும்)



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

## - மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

21

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

பைஅத் நிகழ்ச்சி மிகவும் எளிமையாக நடைபெற்றது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தரையில் விரிக்கப்பட்டிருந்த ஒரு விரிப்பின் மீது அமர்ந்திருந்தார்கள். அவர்கள் தமது வலது கையை நீட்டி பைஅத் செய்ய வந்திருக்கும் சீடரின் வலது கரத்தை கையில் ஏந்தியவாறு பைஅத் வாங்கினார்கள். இவ்வாறு கரம் பற்றிய நிலையில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கூறிய வாசகங்களை வந்திருந்தவரும் திருப்பிக் கூறினார். அந்த வாசகங்கள் பின்வருமாறு:

“நான் இன்று என்னுடைய எல்லாப் பாவங்களுக்கும், தீய பழக்க வழக்கங்களுக்கும் அஹ்மது (அலை) அவர்களின் கையில் பாவமன்னிப்புக் கோருகிறேன். என்னுடைய இறுதி நாள் வரை என்னால் இயன்ற அளவுக்கு எல்லாப் பாவங்களிலிருந்தும் விலகி இருப்பேன் என்று உண்மையாகவும், உளப்பூர்வமாகவும் உறுதி கூறுகிறேன். எல்லாவிதமான உலகியல் விஷயங்களை விடவும் எனது மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவேன். 1889–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12–ஆம் நாள் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் அடங்கியிருக்கும் 10 நிபந்தனைகளை என்னால் இயன்ற அளவு கடைபிடித்து வருவேன். என்னுடைய கடந்த காலப் பாவங்–களுக்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகிறேன்.”

மேற்கண்ட வாசகங்கள் உருதுவில் கூறப்பட்டன. பின்னர் கீழ்க்காணும் வாசகங்கள் அரபியில் கூறப்பட்டன:

அஸ்தக்ஃபிருல்லாஹ ரப்பீ மின்குல்லி ஸன்பின்வ் வஅதூபு இலைஹி (மூன்று முறை) அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹூ லாஷரீகலஹூ வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ. ரப்பீ இன்னீ ழலம்த்து நஃப்ஸீ வஃதரஃப்து பிஸன்பீ ஃபக்ஃபிர்லீ ஸுனூபீ. ஃபஇன்னஹூ லாயக்ஃபிருஸ்ஸுனூப இல்லா அன்த்த.

பொருள்: நான் என் இறைவனாகிய அல்லாஹ்விடம் எல்லாப் பாவங்களுக்காகவும் பாவமன்னிப்புக் கோருகிறேன். வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும், அவனுக்கு இணை எதுவும் இல்லை என்றும் நான் சாட்சி கூறுகின்றேன். முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன். என்னுடைய மேலான இறைவனே! நான் என்னுடைய ஆன்மாவுக்குத் தீங்கிழைத்து விட்டேன். என்னுடைய பாவங்கள் அனைத்தையும் ஒப்புக் கொள்கிறேன். என்னுடைய பாவங்களை நீ மன்னிப்பாயாக. உன்னைத் தவிர பாவங்களை மன்னிப்பவர் வேறு யாரும் இல்லை.

பின்னர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது கரங்களை உயர்த்தி துஆ செய்தார்கள். அவர்களுடைய சீடர்களும் அவ்வாறே செய்தனர். துஆச் செய்து முடித்ததும் அந்த நிகழ்ச்சி முடிவுக்கு வந்தது. பிற மதங்களில் உள்ளதைப் போன்று நீர் முழுக்காட்டுதலோ, ஞானஸ்நானம் வழங்குதலோ அல்லது அது போன்ற வேறு சடங்குகளோ எதுவும் நடைபெறவில்லை. அவற்றிலெல்லாம் அடிப்படைத் தத்துவங்களை சடங்குகள் பின்னுக்குத் தள்ளிவிடும் பேரபாயம் நிறைந்ததுள்ளது.

பைஅத் என்பது ஒரு ஜமாஅத்தில் இணைகின்ற நிகழ்ச்சி மட்டுமல்ல. அது ஓர் இமாம் வழியாக இறைவனிடம் செய்யப்படுகின்ற மார்க்க உடன்பாடாகும். இதில் அந்த இமாம்,



பைஅத் செய்பவரின் கையைப் பற்றுவதன் மூலம் அவர் மேற்கொள்ளும் உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். இந்தத் தொடர்பு கட்டுப்பாடு பற்றிய உணர்வை ஆழமாக்குவதுடன் அதனை நிறைவேற்றுகின்ற ஆற்றலையும் அதிகமாக்குகிறது.

இஸ்லாத்தின் தூய தோற்றுனர் (ஸல்) அவர்கள் மூன்று வெவ்வேறான தருணங்களில் பைஅத்தை ஏற்றுக் கொண்டிருக்–கிறார்கள். ஒன்று ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது நிகழ்ந்தது. இது 'பைஅத்தே ரிழ்வான்' என்று அழைக்கப்படுகிறது. இதனைப் பற்றிய குறிப்பு திருக்குர்ஆனின் 48:19–வது வசனத்தில் காணப்படுகிறது. ஹிஜ்ரத்திற்கு முன் மக்காவில் இரண்டு முறை பைஅத் வாங்கப்பட்டது. அப்போது செய்யப்பட்ட உறுதி மொழி இதுவாகும்:

"அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் அடிபணிய மாட்டோம்; திருட மாட்டோம்; விபச்சாரம் செய்ய மாட்டோம்; எங்கள் குழந்தை–களைக் கொல்ல மாட்டோம்; அவதூறு கூற மாட்டோம்; எந்த நல்ல விஷயத்திலும் நபி (ஸல்) அவர்களின் கட்டளையை மீற மாட்டோம்."

இரண்டாவது பைஅத் அகபா என்னும் இடத்தில் நடைபெற்றது. அப்போது 73 பேர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பாதுகாப்பதாக உறுதி எடுத்துக் கொண்டார்கள். பெண்களும் அன்னார் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்தார்கள். இது திருக்குர்ஆனின் அதிகாரம் மும்தஹினா வசனம் 60–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்கள் பைஅத் செய்யும்போது கரங்களைப் பற்றிக் கொள்ளும் நிகழ்ச்சி இருக்கவில்லை என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது உறவினர் அல்லாத பிற அந்நியப் பெண்களின் கரங்களை ஒருபோதும் தொட்டதில்லை.

## பைஅத் நடைபெறும் இடம்

பைஅத் நிகழ்ச்சிக்காக லூதியானா நகரத்தைத் தேர்ந்தெடுத்து எதேச்சையாக நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது துணைவியாரை அவரது பெற்றோரிடம் அழைத்துச் செல்வதற்காகவே காதியானை விட்டு புறப்பட்டு லூதியானா நகருக்குச் சென்றதாகத் தெரிகிறது. ஆனால் இதில் இறைவனின் கரங்கள் செயல்பட்டதை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும். எனவே பைஅத்திற்கு முன்பும், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் சில முறை வந்து சென்ற இந்நகரத்தைப் பற்றி சற்று விரிவாகத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

இந்நகரம் பஞ்சாபில் சட்லெஜ் நதியிலிருந்து 8 மைல் தொலைவிலும், தில்லிக்கு வட மேற்கே 190 மைல் தொலைவிலும் அமைந்துள்ளது. அது முக்கியமான இரயில்வே சந்திப்பு ஆகும். 1901–ஆம் ஆண்டு அதன் மக்கள் தொகை 48,640 ஆகவும், 1921–ஆம் ஆண்டு 51,880 ஆகவும் இருந்தது. அதிகமாக உணவு தானியங்கள் விளையும் ஒரு பகுதியாகும். அங்கு காஷ்மீரி நெசவாளர்களால் நெய்யப்படும் ஷால்களும், முக்காடுகளும், தலைப்பாகைகளும், மேஜை நாற்காலிகளும், வாகனங்களும் தயாரிக்கப்பட்டன.

லூதியானா கெஸட் பின்வருமாறு:

"சில மாவட்டங்களே லூதியானாவை விட அதிக வரலாற்று முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்தன. அதன் அமைப்பின் காரணமாக எல்லாக் காலங்களிலும் பல முக்கியமான நிகழ்வுகள் அங்கு நடைபெற்று வந்துள்ளன. மத்திய ஆசியாவுக்குச் செல்லும் முக்கியமான சாலையில் அமைந்துள்ளதால் ஒவ்வொரு படையெடுப்பும், புலம்பெயர்வும் அதனைக் கடந்தே செல்ல வேண்டியதிருந்தது. வரலாற்றுக் காலத்தைப் பார்த்தோமென்றால்




பேரரசுகள் இடையே நடைபெற்ற பல முக்கியமான போர்கள் இதன் சுற்று வட்டாரத்திலேயே நடைபெற்றன."

இந்த நகரம் 1481–ஆம் ஆண்டு (தில்லியை ஆட்சி செய்த) லூதி வம்சத்தைச் சேர்ந்த இருவரால் நிர்ணயிக்கப்பட்டது. அதனாலேயே அந்நகருக்கு (லூதியானா எனும்) அப்பெயர் வழங்கலாயிற்று. (லூதியானா என்பதன் சொற்பொருள் இரண்டு லூதிகள் என்பதாகும்.) 1620–ஆம் ஆண்டு வரை அந்நகரம் மன்னர்களின் கைவசம் இருந்தது. அதன் பின்னர் ராய்கோட்டைச் சேர்ந்த ராய் மன்னர்களின் வசமானது. மொகலாயப் பேரரசு செழித்தோங்கி இருந்த காலத்தில் ராய்கோட் பரம்பரை கோலோச்சி வந்தது. மொகலாயர்களின் வீழ்ச்சியின்போது ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்தி சீக்கியர்கள் சட்லெஜ் நதியின் தென் பகுதி வரை தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொண்டனர். அவர்களின் பல தலைவர்கள் ராய்களின் ஆளுகையில் இருந்த பல பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டனர். ஹரியானாவை வெற்றி கொண்ட புகழ் மிக்க ஜார்ஜ் தாமஸ் என்பவரின் உதவியாலேயே ராய்கள் தங்கள் பகுதிகளைத் தக்க வைத்துக் கொள்ள முடிந்தது. 1806–ஆம் ஆண்டு ரஞ்சித் சிங் சட்லெஜ் நதியைக் கடந்து சென்று அங்கும் இன்னும் விடாப்பிடியாக இருந்து வந்த முஹம்மதிய வம்சத்தைச்

சேர்ந்தவர்களை முறியடித்து அவர்களுடைய ஆளுகையின் கீழ் இருந்து வந்த பகுதிகளைத் தமது மதத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார். ஆப்கானிய அரசரான ஷா ஷுஜா என்பவர் லூதியானாவில் தங்கி இருந்தார் என்றும், அவர் மஹ்மூது ஷா என்பவரால் நாட்டை விட்டு விரட்டி அடிக்கப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. விரட்டியடிக்கப்பட்ட அவர் ஆங்கிலப் பகுதியில் தஞ்சம் புகுந்து ஓய்வூதியம் பெற்றார் என்றும் கூறப்படுகிறது.''

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பிறந்த காலத்தில் இந்நரகம் ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் வந்தது.

பூடே ஷா என்பவர் லூதியின் மகனான சிக்கந்தர் என்பவரின் ஆட்சிக் காலத்தில் லூதியானா பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் பலூச்சியர்களால் கொடுமைப்படுத்தப்பட்டனர். அம்மக்கள் பேரரசரிடம் உதவி கோரி நின்றனர். அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட சிக்கந்தர், லூதி வம்சத்தைச் சேர்ந்த தளபதிகளான யூசுஃப் கான், நிஹாங் கான் என்ற இருவரையும் ஒரு படையோடு அனுப்பி வைத்தார். அவர்கள் அக்காலத்தில் மீர் ஹோட்டா என்று அழைக்கப்பட்ட லூதியானா கிராமத்தைத் தமது தலைமையிடமாகத் தேர்ந்தெடுத்து நாட்டில் அமைதியை நிலைநிறுத்தினர். பேரரசின் தளபதியாக மீர் ஹோட்டா –விலேயே நிஹாங் கான் தங்கி இருந்தார். அந்த இடத்திற்கு லூதியானா என்று பெயர் சூட்டினார். (1481–ஆம் ஆண்டின்போது) அவருடைய மகனும் அதன் பின் அவரது பேரரும் அப்பொறுப்பைக் கவனித்தனர். அவரது பேரரான ஜலால் கான் சனெட் என்ற இடத்தில் காணப்பட்ட செங்கற்களால் லூதியானா கோட்டையைக் கட்டினார்.



மொகலாயப் பேரரசு வீழ்ச்சியுற்றபோது 1760–ஆம் ஆண்டு வாக்கில் அந்நகரம் விரைவாக ராய்களின் வசமானது. 1806–ஆம் ஆண்டு மகாராஜா ரஞ்சித் சிங் ராணி பாக்பாரியிடமிருந்து நாட்டின் பிற பதிகுகளைக் கைப்பற்றியபோது அப்பகுதியையும் கைப்பற்றி தமது மாமாவான ஜிந்தைச் சேர்ந்த ராஜா பாக் சிங் என்பவரிடம் ஒப்படைத்தார். 1809–ஆம் ஆண்டு சர் டி. ஆக்டர் லோனி சட்லெஜ் பகுதியை நோக்கி முன்னேறியபோது அந்நகரின் மேற்குப் பகுதியில் உள்ள நிலப்பகுதி இராணுவத்தளம் அமைப்பதற்காக எங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் 1835–ஆம் ஆண்டு வரை வேறெந்தப் பகுதியும் எங்கள் வசம் இல்லை. இராஜா சங்கத் சிங் இறந்போது அந்நகரமும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் எங்கள் வசமாயின.''

லூதியானாவைப் பொருத்தவரை இரண்டு முக்கியமான விஷயங்கள் நம் கவனத்திற்கு வருகின்றன. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் காலத்தில் அந்நகரம் கிறிஸ்தவப் பிரச்சாரகர்களின் முக்கியமான மேலிடமாக அமைந்திருந்தது. கிறிஸ்தவர்களின் முக்கியப் பத்திரிகையான 'நூர் அஃப்ஷான்' இங்கிருந்துதான் வெளி வந்தது. அதன் முதல் வெளியீடு 1873–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6–ஆம் தேதி வெளி வந்தது. லூதியானாவின் மிஷன் உயர் நிலைப் பற்றி இந்தியாவிலுள்ள மிகப் பழமையான பள்ளிகளில் ஒன்றாகும். அப்போது அது மிகச் சிறப்பாக வளர்ந்தோங்கி வந்தது. இன்னொரு பள்ளி கிறிஸ்தவ போர்டு பள்ளியாகும். அது உறைவிடப் பள்ளியாக நடத்தப்பட்டு வந்தது. முதலாவது கூறப்பட்ட பள்ளி சமீபத்தில் ஒரு சந்தையாக மாற்றப்பட்டு அதன் செயல்பாட்டை இழந்தது. இது கிறிஸ்தவப் பிரச்சாரப் பணியின் சரிவுக்கு ஓர் உதாரணமாகத் திகழ்ந்தது. ஆனால் 1894–ஆம் ஆண்டு அமெரிக்க பிரஸ்பிடேரியன் மிஷனால் ஆரம்பிக்கப்பட்ட டாக்டர் E. ப்ரவ்ன் என்பவரின் மகளிர் மருத்துவமனை அந்தப் பகுதியில் இன்னும் கிறிஸ்தவப் பிரச்சாரப் பணிகள் நடை –பெற்று வந்ததைக் காட்டுகிறது. ஆனால் அவை அதிக வேகமற்றுக் காணப்பட்டன. அக்காலத்தில் லூதியானாவில் முஸ்லிம் மத குருமார்களின் ஆதிக்கமும் அதிகமாக இருந்து வந்தது. மிகுந்த செல்வாக்குள்ள மவ்லவிகள் அந்நகரில் வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய சீடர்கள் விரிந்து பரந்து காணப்பட்டனர். 1857–ஆம் ஆண்டு நடைபெற்ற சிப்பாய்க் கலகத்தில் முக்கியப் பங்காற்றியவர்களும், தலைவர்களாகக் கருதப்பட்டவர்களுமான மவ்லவி அப்துல் காதிர், முஹம்மது ஆகியோர் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கிய பின் லூதியானாவுக்கு வந்து அங்கேயே குடியமர்ந்தார்கள். 1883–ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் 11 வரை இராஜாவின் ஆதரவில் அஹ்லே ஹதீஸ் பிரிவினருக்கும், அஹ்லே சுன்னத் பிரிவினருக்கும் ஃபரீது கோர்ட்டில் நடைபெற்ற பொது விவாதத்தில் அவர்கள் முக்கியப் பங்கெடுத்துக் கொண்டார்கள். மவ்லவி முஹம்மது என்பவர் ஒருமுறை பீகாரிலுள்ள பாட்னாவிற்குச் சென்று அங்கு ஒரு பிரசுரத்தை வெளியிட்டார். அது அங்கு இரத்தக் களரியை ஏற்படுத்தியது.

## அலிகார் பயணம்

1884–ஆம் ஆண்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்தியச் சுற்றுப் பயணம் மேற்கொள்ள நாடினார்கள். 1886–ஆம் ஆண்டு அன்னார் (அலை) அவர்கள் இறை கட்டளைக்கிணங்க ஹோஷ்யார்பூர் நகருக்குச் சென்றார்கள். பைஅத் நிகழ்ச்சிக்குப் பிறகு இந்தியச் சுற்றுப் பயணம் மேற்கொள்ள வேண்டுமென்ற தமது பழைய எண்ணத்தை ஈடேற்றும் விதமாக அலிகார் நகருக்குப் பயணம் மேற்கொண்டார்கள். இந்தப் பயணத்தின் போது அப்துல்லாஹ் சனோரி, மீர் அப்பாஸ் அலீ, சவுத்ரி ஹாமிது

அலீ (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோர் உடன் சென்றார்கள். அங்கு அன்னார் (அலை) ஸய்யிது தஃபத்துல் ஹுஸைன் தாசில்தார் வீட்டில் தங்கினார்கள். அவரது நண்பர் ஒருவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களையும், அன்னாரோடு சென்றிருந்தவர்களையும் தமது இல்லத்தில் ஒரு விருந்துக்கு அழைத்தார். அங்கு மலர்களால் அலங்கரிக்கப்பட்ட சிறிய மேஜைகளின் மீது உணவு வகைகள் வைக்கப்பட்டிருந்தன. அந்த மேஜையைச் சுற்றி விரிப்புகள் விரிக்கப்பட்டிருந்த தரையின் மீது விருந்தினர்கள் அமர வைக்கப்பட்டிருந்தார்கள். இது சற்று வினோதமாகத் தென்பட்டது. ஏனென்றால், அக்காலத்தில் மக்கள் விரிப்புகள் விரிக்கப்பட்ட தரையில் அமர்ந்து உண்பார்கள். தரையில் அவர்கள் முன் உணவுப் பொருள்கள் வைக்கப்படும். மேஜைகள் எதுவும் இடம் பெறாது. மீர் அப்பாஸ் அலீ அவர்கள் இதனை இஸ்லாமிய வழிமுறைக்கெதிரான ஒரு புதிய பழக்கமாக் கருதினார். இதில் தவறு ஏதுமில்லை என்றும், அது போன்ற இறுக்கம் நிறைந்த கருத்துகள் எதையும் இஸ்லாம் போதிக்கவில்லை என்றும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் விளக்கிக் கூறினார்கள். ஆனால் மீர் அப்பாஸ் அலீ அவர்களின் கொள்கைகள் மிகவும் குறுகியவையாக இருந்தன. எனவே அவர் அன்று விருந்து அருந்தாமலேயே இருந்து விட்டார். அந்த சிறிய மேஜைகள் அவருக்கு மிகவும் வெறுக்கத்தக்க பொருள்களாகவே காட்சியளித்தன. இது ஒரு சாதாரண விஷயம். அந்தச் சூழ்நிலையில் ஏற்பட்ட ஒரு தனிப்பட்ட நிகழ்வு. ஆனால் இப்படிப்பட்ட அற்பமான நிகழ்வுகள் தான் ஒரு மனிதரின் உண்மையான சொரூபத்தையும், அவருடைய குணநலன்களையும் வெளிக் கொண்டு வருகின்றன. பின்னர் இந்த மனிதர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை விட்டு விலகி, எதிரிகளின் கூட்டத்தில் சேர்ந்து கொண்டார் என்பது இங்கு குறிப்பிடத் –தக்கதாகும்.

அப்போது அலிகாரில் நடைபெற்ற இன்னொரு நிகழ்ச்சியும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். முஹம்மது இஸ்மாயீல் என்ற மவ்லவி ஒருவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை ஒரு பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்படிக் கேட்டுக் கொண்டார். அந்நேரம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் உடல்நிலை நன்றாக இல்லாதிருந்த போதிலும், இஸ்லாத்தின் பக்கம் அவர்கள் கொண்டிருந்த பற்றின் காரணமாக அந்நிகழ்ச்சிக்கு ஒப்புக் கொண்டார்கள். எனவே அந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. குறிப்பிட்ட நேரம் வந்தபோது, அங்கு உரையாற்றுவதிலிருந்து தாம் இறைவனால் தடுக்கப்பட்டிருப்பதாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அந்த மவ்லவியிடம் கூறினார்கள். மக்களும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை உரையாற்றும்படி வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். மக்களை ஏமாற்றமடையச் செய்ய வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அந்த வற்புறுத்தலை ஏற்றுக் கொள்ளவில்லை. எந்தச் சூழ்நிலையிலும் தாம் இறைவனின் கட்டளையை மீற முடியாது என்று கூறினார்கள். அந்த மவ்லவி மிகவும் அதிருப்தி அடைந்தார். அவர் பின்னாளில் மிகப் பெரும் எதிரியாக மாறினார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை கோழை என்றும், அறிவில்லாதவர்




என்றும், பொய் வாதி என்றும் தூற்றினார். ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் முற்றிலும் இறைவனுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும், அடி பணிந்தவர்களாகவும், உறுதியான இறை நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருந்த காரணத்தால் உலகத்தார் செய்த இந்த கேலி, கிண்டல்களைக் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. அவர்கள் மேலும் ஒரு வாரம் அலிகாரில் தங்கினார்கள். பின்னர் லூதியானாவுக்குத் திரும்பினார்கள். அங்கு சொற்பொழிவு எதுவும் நிகழ்த்தவில்லை.

உடல்நிலை காரணமாகவே தாம் அந்த உரையை நிகழ்த்துவதிலிருந்து தடுக்கப்பட்டதாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கூறுகிறார்கள். பின்னர் அந்த மவ்லவி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு எதிராக ஒரு நூல் எழுதினார். அதில் அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் மரணத்திற்காக பத்துஆ (தீமையை நாடி துஆ) செய்திருந்தார். அந்த மவ்லவி மரணித்த போது அந்த நூல் வெளி வராமல் அச்சிலேயே இருந்தது. அவருடைய நண்பர் ஒருவர் அந்த துஆவை நூலிலிருந்து நீக்கி விட்டு அச்சிட்டு முடித்தார். அதன் மூலத்தில் இருப்பதை அப்துல்லாஹ் சனோரி அவர்கள் கண்டுள்ளார்கள்.

1889–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18–ஆம் நாள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் காதியானுக்குத் திரும்பினார்கள். அக்டோபர் மாதம் அன்னாரின் மாமியார் நோய்வாய்ப்பட்டார்கள். எனவே அவர்கள் மீண்டும் லூதியானா செல்ல வேண்டியது வந்தது. அங்கு அவர்கள் நவம்பர் மாதம் 11–ஆம் நாள் வரை தங்கினார்கள். 1890–ஆம் ஆண்டு பிப்ரவரி ஆரம்பத்தில் அவர்கள் மீண்டும் ஒருமுறை லூதியானா சென்றார்கள். அங்கு ஒரு மாதம் தங்கினார்கள். மார்ச் மாத இறுதியில் அவர்களின் உடல் நலம் குன்றியது. மருத்துவ ஆலோசனை பெறுவதற்காகவும், சிகிச்சை மேற்கொள்வதற்காகவும் மே மாதம் முதல் வாரம் அவர்கள் லாஹூர் சென்றார்கள். அங்கு அப்போது தாசில்தாராக

பணியாற்றிக் கொண்டிருந்த தமது மகன் மிர்ஸா சுல்தான் அஹ்மது உடன் தங்கினார்கள். அவர்களின் உடல் நலக் குறைவு ஜூன் மாத இறுதி அல்லது மத்தி வரை நீடித்தது. நோயின் தன்மை மிகவும் கடுமையாக இருந்தது. எந்த அளவுக்கென்றால் ஒரு முறை அவர்கள் இறந்து விட்டதாகவே வதந்தி பரவியது. ஜூலை மாத ஆரம்பத்தில் ஒரு மாற்றத்திற்காக அவர்கள் லூதியானா சென்றார்கள். அங்கு அவர்கள் இக்பால் கஞ்ச் மொஹல்லாவில் இருந்த சாஹிப்ஸாதா ஹைதர் அவர்களின் இல்லத்தில் தங்கினார்கள். மீர் நாஸிர் நவாப் சாஹிபும் அப்போது லூதியானாவில் இருந்தார்கள். 1890–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15–ஆம் நாள் புதன்கிழமையன்று அவர்கள் காதியான் திரும்பிச் சென்றார்கள்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் பணிகள் நூல்கள் எழுதுவது, பிரசுரங்கள் வெளியிடுவது, உரைகள் நிகழ்த்துவது ஆகியவை மட்டும்தான் என்று கருதி விடக் கூடாது. இவை அனைத்தும் அவர்களை நாள் முழுவதும் பணி செய்பவர்களாக வைத்திருக்கப் போதுமானவைதான். ஆனால் இவற்றோடு அவர்கள் வேறு பல முக்கியமான பணிகளையும் கவனிக்க வேண்டியதிருந்தது. இறுதி ஏழாண்டுகளில் 90,000–க்கும் அதிகமான கடிதங்கள் அவர்களுக்கு வந்தன. அவை ஒவ்வொன்றுக்கும் அவர்கள் தாமே பதில் எழுதினார்கள். உரைகள் நிகழ்த்துவது, விவாதங்களில் ஈடுபடுவது, நூல்கள் எழுதுவது போன்ற பணிகளைச் செய்து வந்த மனிதருக்கு நாளொன்றுக்கு சராசரியாக 35 கடிதங்கள் எழுதுவது என்பது ஒன்றும் சாதாரண விஷயம் அல்ல. இத்தனைக்கும் அவர்களுக்கு உதவியாக செயலாளரோ, உதவியாளரோ, சுருக்கெழுத்தரோ, தட்டச்சு செய்வோரோ இருக்கவில்லை. 60,000 விருந்தினர்களை சந்தித்து அவர்களுக்கு இஸ்லாத்தின் போதனைகளை விளக்கிக் கூறினார்கள். தம்மைச் சந்திக்க வந்த மக்கள் அனைவருக்கும் விருந்தோம்பல் செய்ய வேண்டியிருந்தது. ஏனென்றால், விருந்தினர்களை அன்புடன் உபசரிக்க வேண்டிய முறை பற்றி இஸ்லாம் மிகவும் வலியுறுத்திக் கூறுகிறது. விருந்தினர்கள் தங்குவதற்கோ, உணவருந்துவதற்கோ தேவையான விடுதிகள் எதுவும் காதியானில் இல்லை. பெரிய கடைகளோ, மளிகைக் கடைகளோ அப்போது காதியானில் இருக்கவில்லை. எனவே எல்லா ஏற்பாடுகளையும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தாமே முன்னின்று செய்ய வேண்டியதிருந்தது. தமது விருந்தினர்களின் சிறு சிறு தேவைகளைக் கூட தாமே முன் நின்று நிறைவேற்றினார்கள். ஜலந்தரில் வாழ்ந்து வந்த தமது நெருங்கிய நண்பரான சவுத்ரி ருஸ்தம் அலீ அவர்களிடம் தமக்குத் தேவையான நெய், காய்கறிகள், சோடா, வெற்றிலை போன்ற பொருட்களை வாங்கிக் காதியானுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்வார்கள்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும் மனிதர்களுக்கு ஏற்படக் கூடிய நோய் நொடிகளுக்கு ஆளானார்கள். நோயின் காரணமாக ஏற்படக் கூடிய துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளானார்கள். அந்நாளில் காதியானில் மருத்துவமனைகள் இல்லாத காரணத்தால், மருத்துவ சிகிச்சைக்காகவும் அவர்கள் பட்டாலாவுக்கும், லாஹூருக்கும் செல்ல வேண்டியிருந்தது. ஒருமுறை அவர்கள் தம் மகன் பஷீரின் மருத்துவ சிகிச்சைக்காக ஒரு மாதம் வரை பட்டாலாவில் தங்கி இருக்க நேர்ந்தது. சில வேளைகளில் நோய்வாய்ப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறுவதற்காக அவர்கள் நீண்ட பயணங்களை மேற்கொண்டு லூதியானா, ஜம்மு போன்ற இடங்களுக்கு செல்ல வேண்டியதிருந்தது.

தமது நண்பர்களின் நலத்திலும், மகிழ்ச்சியிலும் அதிக அக்கறை காட்டினார்கள்.

எவர் மக்களுக்கு நன்மை செய்வாரோ அவரே மக்களில் சிறந்தவர் ஆவார் என்ற கூற்றில் அவர்கள் முழுமையான நம்பிக்கை கொண்டிருந்தார்கள். தம்முடைய நண்பர்கள் மத்தியிலும், தம்மோடு தொடர்புடையவர்கள் மத்தியிலும் ஓர் உண்மையான நெருக்கத்தையும், சகோதரத்துவத்தையும் உருவாக்கினார்கள். அந்த நெருக்கமே பலர் மத்தியில் நெருக்கமான உறவான உருவெடுத்தது. மக்கள் உண்மையான மகிழ்ச்சியோடு இருப்பதற்காக அவர்கள் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். இதில் அவர்கள் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என வித்தியாசம் பாராட்டியதே இல்லை. மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த அதே சமயத்தில் பீரான் டிட்டா போன்ற தமது எளிய சேவகர்களையும் கவனிக்கத் தவறவில்லை. சவுத்ரி ருஸ்தம் அலீ அவர்களுக்கு எழுதிய பல கடிதங்களில் பீரானைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். யாருக்காவது நன்மை பயக்குமென்றால் அதற்காகப் பரிந்துரை செய்ய அவர்கள் தயங்கியதே இல்லை. வேலை தேடுவதில் யாருக்காவது உதவி தேவை என்றால் அதனைச் செய்யும்படி தமது நண்பர்களைக் கேட்டுக் கொள்வார்கள். ரஸூல்பூரைச் சேர்ந்த ஃபதஹ் கானின் இளைய சகோதரரான அப்துல்லாஹ் கானுக்கு கடிதம் எழுதினார்கள். அதே போன்று பாபு இலாஹி பக்ஷ்க்கும் உதவி செய்தார்கள். மீர் அப்பாஸ் அலீ அவர்களின் மகனுக்கு ஜம்முவில் ஒரு வேலைக்காக பரிந்துரை செய்தார்கள். இதுபோன்ற விஷயங்களில் அவர்கள் யாரையும் ஏமாற்றமடையச் செய்ய மாட்டார்கள் என்பதனை அறிந்திருந்தனர். மிர்ஸா இமாம் தீன் தனக்காக ஒரு பரிந்துரை கடிதம் எழுதித் தரும்படிக் கேட்டுக் கொண்டபோது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அதனை மறுக்காமல் செய்தார்கள். அதனால் அவர்களுக்கு மிகுந்த தர்மசங்கடம் ஏற்பட்டபோது கூட அதனைச் செய்தார்கள்.

(தொடரும்...)



ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“வாருங்கள்! உயிருள்ள இறைவன் எங்கே இருக்கிறான்? எந்த சமுதாயத்துடன் இருக்கிறான் என நான் உங்களுக்குக் கூறுகிறேன். அவன் இஸ்லாத்துடன் இருக்கிறான். இஸ்லாம் இப்போது மூஸாவின் தூர் (மலை) ஆகும். அங்கிருந்து இறைவன் பேசுகிறான். நபிமார்களுடன் உரையாடிக் கொண்டிருந்த, பிறகு மவுனமாகி விட்ட அந்த இறைவன் இன்று ஒரு முஸ்லிமின் உள்ளத்தில் பேசிக் கொண்டிருக்கிறான்.”

(ஸமீமா அஞ்சாமே ஆத்தம் ரூஹானீ கஸாயின் தொகுதி 11 பக்கம் 346)

லஜ்னா வாக்கிஃபாத்தே நவ் உடனான மெய்நிகர் வகுப்பு பங்களாதேஷ் (31, ஜனவரி 2021)

# கேள்வி மற்றும் பதில்

### அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் வழங்கிய பதில்

**கேள்வி : அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்கான மிகச் சிறந்த வழி என்ன?**

பதில்: அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்கான மிகச் சிறந்த வழி என்னவென்றால், அல்ஹம்துலில்லாஹ் என்று கூறும்போது அந்த நேரத்தில் அல்லாஹ் உங்கள் மீது செய்த அருள்களை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். எப்பொழுதாவது ஏதாவது சிறு கஷ்டத்தில் வீழ்ந்தால் அதை சகித்துக் கொள்ள பழகிக் கொள்ளுங்கள். ஏனென்றால் அல்லாஹ் இன்னும் பல அருள்களைப் புரிந்துள்ளான். அந்த அருள்களை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு சொல்லப்படுகிறது. ஓர் அரசர் இருந்தார். அவரிடம் எங்கிருந்தோ ஒரு முளாம்பழம் போன்ற பழம் இருந்தது. அதை அவர் வெட்டி தனது அவையில் இருந்த ஒருவருக்கு கொடுத்தார். அதை அவர் 'மாஷா அல்லாஹ்; மாஷா அல்லாஹ்' என்று கூறிக் கொண்டே சாப்பிட்டு விட்டார். ஆனால் அந்தப் பழம் மிகவும் கசப்பானதாக இருந்தது. அவர் மிகவும் புகழ்கிறாரே என்பதைப் பார்த்த மன்னன், நானும் அதைச் சாப்பிட்டுப் பார்க்கிறேனே! என்று தானும் அதை சாப்பிட்டார். அதை அவர் சாப்பிட்டுப் பார்த்தபோது அது மிகவும் கசப்பானதாக இருந்தது. உடனே அரசர், நீ என்ன இவ்வாறு புகழ்கிறாய்? இது கசப்பாகவும் சுவையில்லாமலும் இருக்கிறதே! என்று கேட்டார். அதற்கு அவர், இப்போது வரை தாங்கள் எனக்கு நல்ல நல்ல பொருள்களை தந்துள்ளீர்கள். எண்ணிலடங்காத பொருள்களைத் தந்துள்ளீர்கள். என் மீது கருணை செய்துள்ளீர்கள். இன்று ஒரு கசப்பானதை எனக்கு சாப்பிடக் கொடுத்தால் நான் நன்றிகேடு காட்ட விரும்பவில்லை. நன்றிகேடு காட்டி இதை கசப்பானது கசப்பானது என்று கூறி விட்டு துப்பியிருக்க விரும்பவில்லை. இதற்கு முன்பு தாங்கள் என் மீது பல கருணை செய்துள்ளீர்கள் எனும்போது இன்று தாங்கள் அறியாமல் ஒரு கசப்பான பொருளை உண்பதற்காக தந்து விட்டீர்கள். அதற்காக நான் அதை மறுத்து விடுவது, ஆட்சேபனை செய்வது, அல்லது அதை துப்பி விடுவதற்கு எனக்கு உரிமை இல்லை. எனவே நான் மகிழ்ச்சியுடன் சாப்பிட்டு விட்டேன். இன்று எனக்கு ஒரு கசப்பான பொருள் கிடைத்தாலும் நிம்மதியாக அதை சாப்பிடுவதுதான் தாங்கள் என் மீது செய்த கருணைக்கு நன்றி செலுத்துவதற்கான வழியாகும். எனவே, நன்றி செலுத்துவதற்கு மனிதனிடம் இந்த எண்ணம்தான் இருக்க வேண்டும். சரியா?




இவ்வாறு மனிதன் நன்றி செலுத்தக் கூடியவனாக இருக்க வேண்டும். அல்லாஹ் தன் மீது செய்த பேரருளை நினைவில் கொள்ள வேண்டும். சிறு சிறு கஷ்டங்களையும் சகித்துக் கொள்ள வேண்டும். மேலும் அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ செய்ய வேண்டும். அல்லாஹ்வே! உன்னுடைய பல பேரருள்கள் என் மீது இருக்கின்றன. இப்போதும் என் மீது பேரருள் புரிவாயாக. எனது கஷ்டத்தை நீக்குவாயாக. ஆனால் மனிதன் ஒருபோதும் அல்லாஹ்வே! நீ என்னை எந்தக் கஷ்டத்தில் ஆழ்த்தி விட்டாய் என்று அவனிடம் முறையிடக் கூடாது. நான் இப்படிப்பட்டவன் இல்லையே! நீ இப்படித்தான் என்னை கஷ்டத்தில் ஆழ்த்துவாயா? என்பது போன்ற விஷயங்களைக் கூறுவது சரியானதில்லை. சரியா புரிந்து விட்டதா?

என்ன கிடைக்கிறதோ அதை நல்ல முறையில் ஏற்றுக் கொள்ளுங்கள். ஆகையால்தான் ஒரு ஹதீஸில் இவ்வாறு வந்துள்ளது. மனிதன் உலக விஷயங்களில் தன்னை விட கீழுள்ளவர்களைப் பார்க்க வேண்டும். உலக விஷயங்களில் உங்கள் முன்பு உலக விருப்பம் ஒன்று நிறைவேறவில்லை என்றால், பாருங்கள்! இன்னாரிடம் நிறைய பணம் இருக்கின்றது. அந்தப் பெண் என்ன விரும்புகிறாளோ அதை கடைவீதிக்குச் சென்று வாங்கி வருகிறாள். நகை வாங்கி வருகிறாள். விரும்பும் பொருளை வாங்கி வருகிறாள். என்னிடம் பணம் இல்லையே என்று நினைப்பது, பிறகு அவளைப் பார்த்து பொறாமைப்படுவது, வயிறெரிவது, துன்பத்தை உணர ஆரம்பிப்பது ஆகியவை சரியான செயல் அல்ல என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நன்றி செலுத்துவது என்னவென்றால், அல்லாஹ், உங்களை விடத் தாழ்ந்திருக்கும் நிறைய மக்களை விட உயர்வானவர்களாக ஆக்கி இருக்கின்றான். பல ஏழைகள் உலகத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு உண்பதற்கு உணவு கிடைப்பதில்லை. சிலருக்கு ஒரு நேர உணவு கிடைக்கிறது. சிலருக்கு ஒரு நேரம் கூட உணவு கிடைப்பதில்லை. இங்கு ஐரோப்பாவில் கூட இவ்வாறான பல மக்கள் இருக்கிறார்கள். இங்கு பெரும்பாலும் அபிவிருத்திகள் இருந்தபோதிலும், செல்வம் இருந்த போதிலும், உணவுகள் இருந்தும் பட்டினியில் மரணிக்கிறார்கள். பங்களாதேஷில் கூட இன்றும் இரவில் பசியுடன் உறங்குகின்றனர். இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். உணவு உண்ணும்போது இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். அல்லாஹ் எனக்கு உணவு வழங்கியிருக்கின்றான்.

இதே போன்று உலக விஷயங்களில் உங்களை விட கீழிருப்பவர்களைப் பாருங்கள். நான் அவர்களை விட நல்ல நிலையில் இருக்கிறேன் என்று அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனுக்கு நன்றி செலுத்துங்கள். பெருமானார் (ஸல்) அவர்கள்


கூறினார்கள்: மார்க்க விஷயங்களில் உங்களை விட மேலாக இருப்பவர்களைப் பாருங்கள். மார்க்க விஷயங்களில் அல்லாஹ்விடம் தொடர்பு கொள்ளும் விஷயங்களில் நன்மை செய்வதன அடிப்படையில் உங்களை விடச் சிறந்தவர் யார் என்று பார்க்க வேண்டும். பிறகு நீங்களும் அவர்களைப் போன்று ஆவதற்கு அவர்களை விட மேலானவர்களாக ஆவதற்கு முயற்சி செய்யுங்கள். எனவே, மார்க்க விஷயங்களில் உங்களை விட மேலானவர்களைப் பாருங்கள். உலக விஷயங்களில் உங்களுக்கு கீழிருப்பவர்களைப் பாருங்கள். அப்பொழுதுதான் சரியான முறையில் நன்றி செலுத்துவதற்கான பழக்கம் உருவாகும்.

**(தமிழாக்கம்: மவ்லவி M. ஷஹாபுத்தீன்)**

---

*(13-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

தனித்திருந்து தியானத்தில் ஈடுபட்ட பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் மேலும் 20 நாட்கள் ஹோஷ்யார்பூரில் இருந்தார்கள். அந்த நாட்களிலேயே அவர்களுக்கும் லாலா முர்லீதர் என்பவருக்கும் விவாதம் நடைபெற்றது. அது சுர்மயே சஷ்மயே ஆர்யா என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்கான காலகட்டம் முழுமையடைந்த போது ஹுஸூர் (அலை) அவர்கள் எந்த வழியாகச் சென்றார்களோ அந்த வழியாகவே திரும்பி வந்தார்கள். 17, மார்ச் 1886 அன்று காதியான் வந்து சேர்ந்து விட்டார்கள். ஹஸ்ரத் மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:



"ஹோஷ்யார்பூரிலிருந்து முழுமையாக 5, 6 மைல் தொலைவில் ஒரு பெரியவரின் மண்ணறை இருக்கிறது. அங்கு கொஞ்சம் சிறிய தோட்டம் அமைந்திருந்தது. அங்கு சென்று ஹுஸூர் (அலை) அவர்கள் கொஞ்ச நேரம் குதிரை வண்டியிலிருந்து கீழே இறங்கினார்கள். மேலும் அவர்கள், 'அருமையான நிழலைக் கொண்ட இடமாகும். இங்கு கொஞ்ச நேரம் தங்குவோம்' எனக் கூறினார்கள். இதற்குப் பிறகு ஹுஸூர் (அலை) அவர்கள் மண்ணறையை நோக்கி சென்றார்கள். (மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்:) நான் பின்னாலேயே அவர்களுடன் சென்று விட்டேன். ஷேக் ஹாமிது அலி, ஃபதஹ் அலீ கான் குதிரை வண்டிக்கு அருகில் இருந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் மண்ணறைக்கு சென்று அதன் வாயிலைத் திறந்து உள்ளே சென்றார்கள். மண்ணறையின் தலைப் பகுதிக்கு அருகில் நின்று துஆ செய்வதற்காக கையை உயர்த்தினார்கள். மேலும் கொஞ்ச நேரம் துஆ செய்து கொண்டிருந்தார்கள். பின்னர் திரும்பி வந்தார்கள். மேலும் என்னை நோக்கி, 'நான் துஆ செய்வதற்காக கையை உயர்த்தியபோது, இது எந்தப் பெரியவரின் மண்ணறையோ அவர் மண்ணறையிலிருந்து வெளியே வந்து இரண்டு முழங்கால்களிட்டவாறு எனக்கு முன்னால் அமர்ந்து விட்டார். மேலும் நீங்கள் என்னுடன் இல்லாதிருந்தால் நான் அவருடன் உரையாடியும் இருப்பேன். அவர்களின் கண்கள் பெரியவையாக இருக்கின்றன. நிறம் மாநிறமாக இருந்தது என்று கூறினார்கள்."

பிறகு அவர்கள், பாருங்கள்! இங்கு மண்ணறையை சுத்தம் செய்பவர் யாராவது இருந்தால் அவரிடம், (பெரியவராகிய) இவர்களின் நிலைமைகளைப் பற்றி விசாரியுங்கள் என்று கூறினார்கள். அதன்படி, ஹுஸூர் (அலை) அவர்கள் மண்ணறையை சுத்தம் செய்பவரிடம் விசாரித்தார்கள். அதற்கு (மண்ணறையை சுத்தம் செய்யும்) அவர், நான் இவர்களை நேரடியாகப் பார்க்கவில்லை; ஏனெனில் இவர்கள் மரணமடைந்து ஏறக்குறைய 100 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆயினும் இவர்கள் மாநிறமுடையவராக இருந்தார் எனவும், மிகப் பெரிய கண்கள் இருந்தன எனவும்......... இந்த ஊரில் இவர்களுக்கு மிகப் பெரிய செல்வாக்கு இருந்தது எனவும் நான் எனது தந்தை அல்லது பாட்டனாரிடமிருந்து கேள்விப்பட்டிருக்கிறேன் எனவும் கூறினார். (சீரத்துல் மஹ்தி தொகுதி 1 ரிவாயத் எண்: 88 பக்கம் 64-65)

சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அறிவிப்புக்கு முற்றிலும் ஏற்ப ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் நியமிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள்ளேயே 12, ஜனவரி 1889 அன்று பிறந்தார்கள். மேலும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் 20, பிப்ரவரி 1944 அன்று ஹோஷ்யார்பூரிலுள்ள கனக் மண்டி எனும் பரந்த வளாகத்தில், தாம் முஸ்லிஹ் மவ்வூது (வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி) ஆவேன் என்று அறிவிப்பு செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 40 நாட்கள் தங்கியிருந்து தியானத்தில் ஈடுபட்டிருந்த அந்த புனிதமான அறையில் கூட்டு துஆ செய்வதற்காக சென்றார்கள். அது பற்றிய விபரம் 'தாரீகே அஹ்மதிய்யத்' எனும் நூலின் தொகுதி 9 பக்கம் 590-லிருந்து கீழே குறிப்பிடப்படுகிறது.

(தொடரும்...)



# சாலிஹ் நபி (அலை)-ன் 'பெண் ஒட்டகம்'

(A.P.Y. அப்துல் காதிர்)


இக்கருத்துக்கும் எனக்கும் நீண்ட கால தொடர்பு உண்டு. நம் ஜமாஅத்தைச் சேர்ந்த சகோதரர் ஒருவர் ஜமாஅத்தில் சேர்வதற்கு முன்னால் என்னோடு விவாதம் செய்ய வந்திருந்தார். அவர் அதற்குரிய ஆதாரமாக 'காதியானிகளின் ஆகாசப் புளுகு–I' என்ற (மர்ஹூம் அபூ அப்துல்லாஹ் எழுதிய நூலாகும்) நூலைக் கொண்டு வந்திருந்தார். அவரை அழைத்து வந்த நம் ஜமாஅத் சகோதரர் இவர் நம் ஜமாஅத் பற்றி விவாதம் செய்வதற்கு வந்திருக்கிறார் என்று அறிமுகம் செய்தார். நான் அவரிடம், 'உங்களுக்கு என்ன சந்தேகம்; கேளுங்கள்' என்றேன். அவர், 'அபூ அப்துல்லாஹ்வின் நூலை என் கண் முன் வைத்து இதற்குப் பதில் சொல்லுங்கள்' என்றார். அதை எடுத்துப் பார்த்தேன். அங்கங்கு சில பக்கங்களைப் புரட்டினேன். பிறகு, 'இந்நூலுக்கு வரிக்கு வரி பதில் வேண்டுமா? பக்கத்துக்குப் பக்கம் பதில் வேண்டுமா? அல்லது குர்ஆன், நபிமொழி, வரலாறு பற்றி இவர் எழுதிய கருத்துகளுக்கு பதில் வேண்டுமா?' என்று கேட்டேன். அதற்கு அவர், 'உங்கள் விருப்பம் போல் பதில் தாருங்கள்' என்றார்.

நான் அந்நூலின் முன்னுரையில் கூறியுள்ள, காதியானிகள், அல்லாஹ்வின் ஒட்டகம் மலையைப் பிளந்து கொண்டு வெளிவந்து குட்டி போட்டதை மறுக்க முடியுமா? என்ற இடத்தைப் படித்துக் காட்டி, இக்கருத்தை நீங்கள் திருக்குர்ஆன், நம்பத்தகுந்த நபிமொழிகளிலிருந்து எடுத்துக் காட்டுங்கள் என்றேன். ஆ.கா. அப்துல் ஹமீது பாகவியின் தமிழ் மொழிபெயர்ப்பை எடுத்து வந்து சாலிஹ் நபியின் ஒட்டகம் என்று வருமிடங்களையெல்லாம் படிக்கச் செய்து இவ்விடங்களில் எங்காவது மலையைப் பிளந்து கொண்டு ஒட்டகம் வந்ததாகவும், வந்தவுடன் குட்டி போட்டதாகவும் கூறப்பட்டுள்ளதா என்று கேட்டேன். அவரிடம் எந்தப் பதிலும் இல்லை. மவுனம்; பின்னர் இது சம்பந்தமாக நம்பத்தகுந்த நபிமொழியை உங்களால் கொண்டு வர முடியாது. எனவே ஒரு பொய்யான நபிமொழியை –யாவது கொண்டு வாருங்கள் என்றேன். அபூ அப்துல்லாஹ், திருக்குர்ஆனில் இல்லாத நம்பத்தக்க நபிமொழியில் இல்லாத கருத்தைக் கூறியுள்ளார் என்று கூறினேன்.

இரண்டாவது நிகழ்வு என்னவென்றால், பி.ஜே. தன் திருக்குர்ஆன் தமிழாக்கத்தில், அல்லாஹ்வின் பெண் ஒட்டகம் என்று வருமிடங்கள் எல்லாவற்றிலும் அல்லாஹ்வின் ஒட்டகம் என்று மொழிபெயர்த்துள்ளார். திருக்குர்ஆனில் **7:74, 7:78, 11:65, 17:60, 26:156, 54:28, 91:14** ஆகிய ஏழு இடங்களில் نَاقَةُ اللهِ (நாக்கத்துல்லாஹ்) அல்லது نَاقَةً (நாக்கத்துன்) அதாவது 'அல்லாஹ்வின் பெண் ஒட்டகம்' அல்லது 'பெண் ஒட்டகம்' என்ற சொல் பல்வேறு நிலைகளில் வரும் இடங்களில் எல்லாம் பி.ஜே. 'அல்லாஹ்வின் ஒட்டகம்' அல்லது 'ஒட்டகம்' என்றுதான் எழுதியுள்ளார். 'பெண்' என்ற சொல்லை விட்டு விட்டார். ஆனால், இவரைத் தவிர ஏனைய எல்லா மொழிபெயர்ப்–பாளர்களும் அல்லாஹ்வின் பெண் ஒட்டகம் என்று மொழிபெயர்த்துள்ளனர். ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் எல்லாரும், She Camel of Allah என்று மொழிபெயர்த்துள்ளனர். ஆண் பெண் என்ற பால் வேறுபாடு மனிதனுக்கு மட்டும்தான் உண்டு. விலங்குகளுக்குத் தேவையில்லை என்று கருதி விட்டாரோ என்னவோ தெரியவில்லை.

என்னுடைய கருத்து என்னவென்றால், அல்லாஹ் சாலிஹ் நபியின் ஒட்டகத்தைப் பெண் ஒட்டகம் என்று ஏழு இடங்களில் கூறியிருக்கும்போது அதனை ஒட்டகம் என்று கூறுவது தவறு ஆகும்.

நான் இஸ்லாத்தின் மறுபெயர் அஹ்மதிய்யத் என்று ஒரு நூலை எழுதியிருப்பதைக் கேள்விப்பட்டு தவ்ஹீது ஜமாஅத் சகோதரர் ஒருவர் என்னைப் பார்க்க வந்தார். என்ன விஷயம் என்று கேட்டேன். தவ்ஹீது ஜமாஅத் பற்றி உங்களிடம் பேச வேண்டும் என்றார். நான் உங்கள் கேள்விகளைக் கேளுங்கள் என்றேன். உங்களுக்கு தவ்ஹீது ஜமாஅத் பற்றி என்ன தெரியும்? என்று நான் கேட்டேன். அதற்கு அவர் தான் சென்னையில் உள்ள தவ்ஹீது மத்ரஸாவில் முதலாம் ஆண்டு படித்துள்ள மாணவன் என்றார். அதற்கு நான் 'நாகதல்லாஹி' எனும் சொல்லுக்கு பொருள் என்ன? என்று கேட்டேன். அதற்கு அந்த மாணவன், 'அல்லாஹ்வின் பெண் ஒட்டகம்' என்றார். யோசித்துக் கூறுங்கள். 'அல்லாஹ்வின் பெண் ஒட்டகமா? ஒட்டகமா?' என்று கேட்டேன். அதற்கு அவர், 'அல்லாஹ்வின் பெண் ஒட்டகம் என்றுதான் எங்களுக்கு சொல்லித் தந்தார்கள்' என்று பதில் கூறினார். நான் பி.ஜே.–யின்



திருக்குர்ஆன் தமிழாக்கத்தில் 'நாகதல்லாஹி' என்று வரும் ஏழு இடங்களையும் சுட்டிக்காட்டி படிக்கச் சொன்னேன். எல்லா இடங்களிலும் 'அல்லாஹ்வின் ஒட்டகம்' என்று வாசித்தார். நான், அச்சொல்லுக்கு 'அல்லாஹ்வின் பெண் ஒட்டகம் என்பது தான் சரி என்றால், பி.ஜே எழுதியிருப்பது சரியா? தவறா?' என்று கேட்டேன். 'தவறு' என்று பதில் சொன்னார்.

ஒட்டகத்தை அறுத்தல்: திருக்குர்ஆனில் 7:78, 11:66, 26:158, 91:15 ஆகிய வசனங்களில் عَقَرُوْ எனும் சொல்லும், 54:30 வசனத்தில் عَقَرَ என்ற சொல்லும் வருகிறது. இதற்கு அவர்கள் அதன் (பெண் ஒட்டகத்தின்) கால்களைத் துண்டித்து தங்கள் இறைவனின் கட்டளைக்கு மாறு செய்தனர்.

சாலிஹ் நபியின் பெண் ஒட்டகத்தின் கால் நரம்பைத் துண்டித்தனர் என்பதுதான் அதன் பொருள். ஆங்கிலத்தில், They hamstrung the she camel and rebelled against the command of their Lord என்று கூறலாம். அவர்கள் சாலிஹ் நபியின் பெண் ஒட்டகத்தின் கால் நரம்பைத் துண்டித்தனர். Hamstrung என்பதற்கு இதுதான் பொருள்.

ஆனால் பலர், அந்த ஒட்டகத்தை அறுத்தனர். அவர்களின் இறைவனது கட்டளையை மீறினர் (7:78) என்றும் பொருள் கூறுகின்றனர்.

ஆங்கிலத்தில் They killed her (11:65) என்றும் கூறுகின்றனர். நம் கேள்வியாவது, عَقَرُوْ எனும் சொல்லுக்கு ஒட்டகத்தை அறுத்தல், கொல்லுதல், வெட்டுதல் என்று எப்படி இல்லாத பொருள் அச்சொல்லுக்கு கூறுகின்றீர்கள்? கால் நரம்பைத் துண்டித்தல் என்பதற்கு பதிலாக ஒட்டகத்தை அறுத்தல், கொல்லுதல் என்று பொருள் கூறுபவர்கள், அச்சொல் வரும் ஏதாவது ஒரு வசனத்திற்கு கால் நரம்பைத் துண்டித்தல் என்றும் பொருள் கூறுகின்றனரா?

எடுத்துக்காட்டாக, மவ்லானா வஹீதுத்தீன் கானின் திருக்குர்ஆன் தமிழாக்கத்தில் 7:77 வசனத்திற்கு அவர்கள் அப்பெண் ஒட்டகத்தை அறுத்துத் தம் இறைவனின் கட்டளையை மீறினர் என்றும், ஏனைய இடங்களில் அவர்கள் அதன் குதிக்கால் நரம்பை வெட்டி(க் கொன்று) விட்டனர் (11:64) என்று பொருள் கூறியுள்ளனர். இதிலும் கொன்று என்பதை அடைப்புக்குள் போட்டுள்ளனர்.

ஆங்கிலத்தில் பெரும்பாலார் கால் நரம்பைத் துண்டித்தல் என்றே பொருள் கூறியுள்ளனர். இதுதான் அச்சொல்லின் பொருள் என்றால், வெட்டுதல், கொல்லுதல் என்று ஏன் பொருள் கொள்கின்றனர் என்றால் ஒட்டகத்தை அறுக்கும்போது அவை ஓடாதிருக்க அதன் கால் நரம்பைத் துண்டித்தல் காரணமாக இருக்கலாம். இதுவும் தவறுதான். ஏனென்றால், ஒட்டகத்தை அறுப்பவர்கள் அவற்றை நின்ற நிலையிலேயே அதன் கழுத்தை அறுத்து விடுகின்றனர்.

திருக்குர்ஆன் 22:37 வசனத்தில், அவற்றை வரிசைகளாக நிறுத்தி அவற்றின் மீது அல்லாஹ்வின் பெயரைக் கூறுங்கள். அவை நிலத்தில் சாய்ந்து விட்டால், அவற்றி(ன் இறைச்சியி)லிருந்து நீங்களும் உண்ணுங்கள் என்று வருகிறது. அப்படியென்றால், அவர்கள் அதன் கால் நரம்பைத் துண்டித்ததன் காரணம், சாலிஹ் நபி (அலை) அவர்கள் அந்த ஒட்டகத்தில் ஏறி தம் பிரச்சாரத்தைச் செய்து வந்தார்கள். அதனைத் தடுக்கவே அதன் கால் நரம்பைத் துண்டித்து விட்டனர் என்பதுதான் உண்மை.

## ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அனைத்து சகோதரர்களும் கவனமாகக் கேளுங்கள். நான் எனது ஜமாஅத்திற்கும் எனது நஃப்ஸிற்கும் சொற்பொழிவில் இடம் பெறும் வாய் வாதங்களை மட்டும் விரும்புவதை ஏற்க மாட்டேன். **மாநாட்டின் நோக்கங்கள்** சொற்பொழிவு நிகழ்த்தியவர் எத்துணை சிறப்பான அற்புதமான சொற்பொழிவு நிகழ்த்துகிறார்! வார்த்தைகளில் எவ்வளவு அழுத்தம் இருக்கிறது!! என்ற விஷயத்தில் மாநாட்டின் நோக்கங்கள் அடங்கி விடக் கூடாது. அதனை நான் விரும்புவதில்லை. ஆயினும், என்ன பணி செய்தாலும் அது செயற்கையாக அல்லாமல் அல்லாஹ்விற்கு உரியதாகவே இருக்க வேண்டும். இதுவே எனது இயல்பாகும். எதனைப் பேசினாலும் அல்லாஹ்விற்காக பேச வேண்டும். நாம் கூறுகின்ற அனைத்தும் இறைவனுக்காக இருக்க வேண்டும். அவனது திருப்தியைப் பெறுவதற்காக இருக்க வேண்டும்; நாம் கேட்கின்ற விஷயங்களை இறைவனின் கூற்று என்ற கண்ணோட்டத்தில் கேட்க வேண்டும். மேலும் அதன்படி செயல்படுவதற்காக கேட்க வேண்டும். அறிவுரைக்கான சபையில் இன்று நல்ல சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது என்று கூறுவதற்காக அறிவுரையை செவிமடுத்தல் கூடாது. கவனமாகக் கேட்க வேண்டும். அதன்படி செயலாற்றுவதற்காகக் கேட்க வேண்டும். சொற்பொழிவாளரின் சொற்பொழிவைப் பாராட்டும் எண்ணத்தில் கேட்கக் கூடாது.



(ஜுமுஆ குத்பா 27.07.2017)